Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரெண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 11 (02.04.2004) வெள்ளிக்கிழமை இதழ் :184

திருமறைக் கலா மன்றம்
தயாரித்து வழங்கும்
காவிய நாயகன்
(திருப்பாடுகளின் காட்சி)
மார்ச் 30,31, ஏப்ரல் 1,3,4, - 2004
(செவ்வாய், புதன், வியாழன், சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் - மாலை 7.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சி-2335) - திருமறைக் கலா மன்றம்

# புதிய அரசினை தீர்மானிக்கும் நாடாளுமன்றத் தேர்தல் இன்று!

## காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பம்

(கொழும்பு)

**13 ஆவது நாடாளுமன்றத்தைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்களிப்புக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டதாக தேர்தல் செயலகம் நேற்று மாலை அறிவித்தது.**

இன்றைய தேர்தலில் நாடு முழுவதும் உள்ள வாக்காளர்களுக்காக பத்தாயிரத்து 439 வாக்களிப்பு நிலையங்கள் அமைக் கப்பட்டுள்ளன. இம்முறை தேர்தலில் வாக்க ளிப்பதற்கு சுமார் 1 கோடி 28 லட்சம் வாக் காளர்கள் தகுதி பெற்றிருக்கின்றனர்.

இந்தத் தேர்தலின் மூலம் நாடு முழுவ திலும் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களி லிருந்தும் 196 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப் படவுள்ளனர்.

தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அரசியற்கட்சிகள் பெற்ற வாக்குகளுக்கு அமைவாக தேசியப் பட்டியல் மூலமாக 29 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய் யப்படுவர்.

மொத்தமாக உள்ள 225 நாடாளுமன்ற ஆசனங்களைக்கைப்பற்றுவதற்காக இம்முறை 24 அரசியற்கட்சிகளின் சார்பில் 3361 வேட்பா ளர்களும், 192 சுயேட்சைக் குழுக்களின் சார் பாக 2337 வேட்பாளர்களும் போட்டியி டுகின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இரா ணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வெளியே உள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பில் வன்முறைகள் நடந்தால் ரத்துச் செய்து மீண்டும் வாக்களிப்பு!

### தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவிப்பு

இன்று நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களில் வன் முறைச் சம்பவங்கள் இடம்பெற்றால் வாக்க ளிப்பு நிலையங்களின் வாக்களிப்பை ரத்துச் செய்து மீண்டும் தேர்தல் நடத்த உத்தரவி டப்படும் என தேர்தல் ஆணையாளர் தயா னந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தாவது -

வாக்களிப்பு நிலையம் அமைந்துள்ள தொகுதி மற்றும் மாவட்டங்களில் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் வாக்களிப்பு நிலை யங்களில் ஏற்படும் வன்முறைச் சம்பவங்கள் தடைகளை ஏற்படுத்தலாம்.

வன்முறை ஒன்றில் ஈடுபட்டு வாக்களிப்பு நிலையத்தின் வழமையான செயற்பாடுகளை குழப்பி, வேட்பாளர்கள் ஒருவரின் வெற் றிக்கோ, வேறு ஒருவரின் தோல்விக்கோ துணைபோக எண்ணினால் அந்த முயற்சிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட உளவுப் பயிற்சியை பெற்று 34 படையினர் வெளியேறினர்!

இராணுவத்தின் உளவுப்பிரிவினால் நடத்தப்பட்ட விசேட புலனாய்வுப் பயிற்சியைப் பெற்ற மேலும் ஒரு தொகுதிப்படையினர் தமது பயிற்சியை முடித்து நேற்று முன்தினம் வெளியேறியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டுக்கான இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் எம்.டி.எம். சந்திரபாலவின் வழிகாட்டலில் இருந்து பெறப்படும் விசேட யுத்த புலனாய்வுப் பயிற்சி, படையினருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்தப் பயிற்சியைப் பெற்ற 34 பேர் கொண்ட ஐந்தாவது தொகுதிப்படையினரே தமது பயிற்சியை முடித்து நேற்று முன்தினம் வெளியேறினர்.

பலாலியிலுள்ள- யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியான சுதந்திரமான தேர்தல்; பொலிஸ்-புலிகள் சந்திப்பில் இணக்கம்!

இன்று இடம்பெறும் பொதுத் தேர்தலின் போது, அமைதியானதும், சுதந்திரமானது மான வாக்களிப்பு இடம்பெறுவதற்கு ஒத்து ழைப்பு வழங்குவதென தமிழீழ விடுதலைப் புலிகளும், பொலிஸ் தரப்பும் உறுதி வழங்கி யுள்ளன.

இது தொடர்பாக நேற்றுப் பிற்பகல் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந் துரையாடலில் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப் பாளர் பரா, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, இமையவன், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த வணகுரு மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் அனிற்றா, கண்காணிப்பாளர் இக்ஸ் மார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் எவ்வித இடையூறுக ளுமற்ற சுதந்திரமாக தேர்தல் இடம்பெறு வதன் மூலமே மக்களது ஜனநாயக அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதாக அமையும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவின் முடிவை கண்டித்து 15 மருத்துவர்கள் வெளியேற்றம்!

## நாடாளுமன்ற தேர்தல்; அமெரிக்கா அக்கறை!

இலங்கையில் இன்று இடம்பெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்- நீதியானதும், நியாயமான முறையிலும் இடம்பெறவேண்டும்

# 15 மருத்துவர்கள் வெளியேற்றம்!

## நோயாளர்கள் பெரும் நெருக்கடியில்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்த வடபகுதியைச் சேர்ந்த 15 வைத்திய நிபுணர்கள் நேற்று அங்கிருந்து வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில்- வடபகுதியைச் சேர்ந்த மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்படுகையில், தம்மாலும் சரியான முறையில் பணியில் ஈடுபடமுடியாதெனத் தெரிவித்தே இவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு- வெளியேறியவர்களில் 5 வைத்திய நிபுணர்கள் உட்பட 15 வைத்தியர்கள் அடங்குவதாகவும் இவர்களது வெளியேற்றத்தினால், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பாரிய நெருக்கடி நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு- வெளியேறிய வைத்தியர்களை பொலநறுவை வரை பொலிஸார் பாதுகாப்பாக கூட்டிச் சென்றுவிட்டனர்.

இதேவேளை, இந்த வைத்தியர்கள் மீளவும் தமது பணிகளில் இணைந்துகொள்ள வேண்டுமெனக்கோரி அந்த வைத்தியசாலையின் ஊழியர்கள் நேற்று காலை 11.30 மணியளவிலிருந்து நண்பகல் 12.40 வரை அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த வைத்தியர்களின் வெளியேற்றம் தொடர்பாக- வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் தேவராஜன் தெரிவிக்கையில் -

தற்போதைய (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் இன்று இடம்பெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்- நீதியானதும், நியாயமான முறையிலும் இடம்பெறவேண்டும் என்பதில் தாம் கரிசனையுடன் இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சுயாதீன தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளை சந்தித்த போதே - அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி லன்ஸ்ரீட் இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தச்சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பான குற்றச்சாட்டுக்களும் சுயாதீன தேர்தல் கண்காணிப்புக் குழுவினால் முன் வைக்கப்பட்டது.

இதுவரை இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளில் ஐக்கிய தேசியக் கட்சியே அதிகளவில் வன்முறைகளோடு (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவின் நடவடிக்கை ஐ.நா அமைப்புகள் கண்டனம்!

கருணா குழுவினரால் வட பகுதி மக்கள் மட்டக்களப்பிலிருந்து வெளியேற்றப்படுவது குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் அமைப்புக்களான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி மையம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம், சிறுவர் அமைப்பு மற்றும் உலக உணவுத்திட்டம் என்பவையே- கருணா குழுவினரால் வடபகுதி தமிழர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளன.

கருணா குழுவினரால் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள பதற்ற நிலைமை, பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ளது எனத் தெரிவித்துள்ள ஐ.நா சபையின் அமைப்புக்கள்,

ஐ.நா. சபையின் மனித உரிமை பிரகடனம் 36 இன்படி- (12 ஆம் பக்கம் பார்க்க)

## நேரகாலத்துடனேயே வாக்களிக்க தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்தல்!

13 ஆவது நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்காக, இன்று நடைபெறவுள்ள தேர்தலில் வாக்காளர்கள் நேரகாலத்துடனேயே சென்று வாக்களிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கேட்டுள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

தேர்தல் வாக்களிப்பு இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகி பி.ப 4 மணிவரை இடம்பெறும். இதனால், நேரகாலத்துடனேயே வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று உங்கள் வாக்குகளை அளியுங்கள்.

வாக்காளர் அட்டை கிடைக்காவிட்டால் உங்களுடைய பெயர் வாக்காளர் இடாப்பில் இருக்குமாயின், உங்களுக்குரிய வாக்கெடுப்பு நிலையம் தெரிந்திருக்குமாயின்- அங்கு செனறு வாக்கெடுப்பு நிலை உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டால் வாக்காளர் இடாப்பை பரிசீலனை செய்து, உங்களது பெயர் காணப்படுமாயின் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....

ஒதுக்கிடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
EXPOAIR
வான் வெளியில் உங்கள் நண்பன்...
your friend in the skies...

# சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகத்தினர் பொன்விழாவை முன்னிட்டு விஷேட சமய அறிவுப் போட்டிகள் செயல் முறைப் போட்டிகள், சைவசமய அறிவுப்பரீட்சைகள் என்பனவற்றை நடத்தினர்.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற வர்களின் பெயர் விபரம் வருமாறு.

முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு கடந்த ஞாயிறு பி.ப 3.00 மணிக்கு யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் பரிசில்கள் வழங்கும் வைபவம் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக் கது.

**தரம்-1**

சி.கேதுகா (தெல்லிப்பளை மகா ஜனாக்கல்லூரி), ம.திருஷ்கா (யாழ். இந்து ஆரம்பபாடசாலை), இ.உதய பவன் (யாழ்.இந்து ஆரம்ப பாட சாலை)

**தரம்-2**

கு.குணசிகா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை),சி.கார்த்திக் (யாழ். ஆனைப்பந்தி மெதடிஷ்த மிஷன் வித்தியாலயம்), சோ.கீர்த்திகா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

**தரம்-3**

மோ.சோபிதன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), பி.குணவரன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியா லயம்) பா.வைஸ்ணவி (கோண்டா வில் இந்து மகா வித்தியாலயம்)

**தரம்-4**

ந.அமிழ்தினி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), செ.சேயோன் (பரியோ வான் கல்லூரி), இ.கஸ்தூரிராஜன் (அச்சுவேலி மகாவித்தியாலயம்)

**தரம்-5**

சா.மதுரமி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),பா.சிவனருட்செல்வசர்மா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி யாலயம்),வி.வினோத் (நயினாதீவு மகா வித்தியாலயம்).

**தரம்-6**

ச.டினோஜா (வேம்படி மகளிர் கல்லூரி),பி.நந்திகரன் (யாழ்.இந்துக் கல்லூரி), சௌ.ஸ்ரீஹர்ஷன் (தெல் லிப்பளை மகாஜானக் கல்லூரி).

**தரம்-7**

பா.நிஷாந்திகா (வேம்படி மகளிர் கல்லூரி - தங்கப்பதக்கம்), யோ. கார்த்திகா (தெல்லிப்பளை மகாஜனா னாக் கல்லூரி),சௌ.பிரதர்சனா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி).

**தரம்-8**

வி.கவினா (வேம்படி மகளிர் கல் லூரி),கு.தேனுகா (ஆவரங்கால் நட ராஜ இராமலிங்க வித்தியாலயம்), வே.தேவகுமாரி (கலாநிதி ஆ.தியா கராஜா ம.ம.வி).

**தரம்-9**

ச.அஜிதா (இராமநாதன் கல் லூரி),க.நிசாந்தன் (சாவகச்சேரி இந் துக்கல்லூரி),ச.சுவேதா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி)

**தரம்-10**

அ.கார்த்திக் (சாவகச்சேரி இந் துக்கல்லூரி),தெ.தர்சினி (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்),ப. பத்மநிருபா (கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)

**தரம்-11**

ப.ராஜதீபன் (பரியோவான் கல் லூரி)

**தரம்-12**

அ.லோகீசன் (சேர்.வைத்திலிங் கம் துரைச்சாமி ம.ம.வி), கு.சரிதா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ஏ. புராதனி (தெல்லிப்பளை மகாஜ னாக் கல்லூரி).

**தரம்-13**

பு.மைதிலி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), இ.செல்வக்குமார் (இணு வில் இந்துக்கல்லூரி), வி.சிவரஞ் சினி (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

**செயல்முறைப் போட்டி**

**கோலம்போடுதல் போட்டி**

**மத்திய பிரிவு**

அ.அனோஜா (கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), கோ. நிவர்சினி (வண்.நாவலர் மகாவித்தி யாலயம்), த.சூரியகலா (வண். நாவ லர் வித்தியாலயம்), கோ.சசிரேகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**கோலம்போடுதல் போட்டி**

**மேற்பிரிவு**

பி.முத்துலக்ஷ்மி (324, கஸ்தூரி யார் வீதி, யாழ்ப்பாணம்), மோ. விஜிதா (250/2, அரசடி வீதி,யாழ்ப் பாணம்), த.காமகோடிகா (இல.2, 1 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), கா.ரூபாஜினி ( 224/ 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பா ணம்).

**மாலை கட்டுதல் போட்டி (மத்திய பிரிவு)**

ஜெ.அமிலா (இராமநாதன் கல் லூரி), வி.ரதிவதனி (இராமநாதன் கல்லூரி), யோ.புஸ்பவதனி இராம நாதன் கல்லூரி).

**மாலை கட்டுதல் போட்டி (மேற்பிரிவு)**

ஸ்ரீ.கோகுலன் (இணுவில் இந் துக் கல்லூரி) ரேணுகா துரைசிங்கம் (கதிர்காம கோவிலடி நீர்வேலி வடக்கு நீர்வேலி).

(தொடரும்....)

# கிளிநொச்சி பாடசாலைகளின் க.பொ.த. (சா/த) பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட் சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று மாணவிகள் 10 'ஏ' எடுத்துள் ளனர்.

திரேசா பெண்கள் கல்லூரியில்- எம்.வைஸ்ணவி 10 'ஏ' யும், பி.அபி ராமி 9 'ஏ' 'பி'யும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் எம்.சிர்துஷா 10 'ஏ'யும், பூநகரி மகாவித்தியாலயத்தில் ஏ. கதீசா 10 'ஏ'யும், திருவையாறு அ.த.க பாடசாலையில் ஆர்.அரவிர்சி 8 'ஏ' 2 'பி' யும், கிளிநொச்சி மகாவித்தி யாலயத்தில் 8 'ஏ', 'சி', 'எஸ்', இராமநாதபுரம் மகாவித்தியாலயத் தில் எஸ்.துவாரகா 6 'ஏ', 'பி', 2 'சி' யும் முழங்காவில் மகாவித்தியால யத்தில் கே. நிசாந்தி 7 'ஏ', 3 'சி' யும எடுத்துள்ளனர்.

உருத்திரபுரம் மகாவித்தியால யத்தில் வி.நிதாவினி 5 'ஏ', 5 'சி' யும், பளை மத்திய கல்லூரியில் எஸ்.யோகலட்சுமி 7 'ஏ', 2 'சி', 'எஸ', தர்மபுரம் மகாவித்தியாலயத் தில் பி.நவினா 4 'ஏ', 'பி', 4 'சி', 'எஸ்', கிளிநொச்சி மத்திய கல்லூரி யில் வி.மகிழினி 5 'ஏ', 2 'பி', 3 'சி', வட்டக்கச்சி மகாவித்தியா லயத்தில் ஆர்.சந்திரராஜ் 6 'ஏ', 2 'பி', 2 'சி' யும், முரசுமோட்டை றோ.க.த.க பாடசாலையில் வி.விஜ யதர்சன் 4 'ஏ', 3 'பி', 2 'சி', 'எஸ்' யும், வேம்பொடு கேணி அ.த.க பாட சாலையில் என்.சுஜிலா 7 'ஏ', 'பி', 2 'சி'யும், கண்டாவளை மகா வித்தியாலயத்தில் எஸ்.பிரசுகன்யா 6 'ஏ', 3 'பி', 'சி' எடுத்துள்ளனர்.(122)

**ராஜா** யாழ்ப்பாணம்.

வசீகரன், பூஜா நடித்த




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30,9.30 (பு.நே)

(சி-2263)

## சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

அம்மன் கோவில் ஒழுங்கை தொண்டைமனாறு என்னும் முகவ ரியை உடைய நவரத்தினம் கண்ணன் என்பவரது பேர்ஸ், தேசிய அடை யாள அட்டை (747661385V), தகவல் திணைக்கள அடையாள அட்டை உட்பட மற்றும் ஆவணங்களுடன், பெருமாள் கோவில் சந்திக்கும், கட் டைப்பிராய்க்கும் இடையில் கடந்த மாதம் 31 ஆம் திகதி அதிகாலை தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத் தவர்கள் 'நமது ஈழநாடு' அலுவலகத் துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். தொலை பேசி இலக்கங்கள்:- 5107, 3922.

**மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**



எமது அன்புக்குரிய நண்பன்

**மா.பத்மராஜ்**

யாழ்.பல்கலைக்கழகத்தில் 27.03.2004 சனிக்கிழமை இடம் பெற்ற 23 ஆவது பட்டமளிப்பு விழாவில் B.A.(Hons) பட்டம் பெற்ற தையிட்டு மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

இவர் கல்வியில் மென்மேலும் உயர்வுகள் பெற்றுச் சிறப்புற வாழ இறைவனை வேண்டுகிறோம்.

(சி-2396) -நண்பர்கள்-

**நிறஞ்சனாஸ்** சங்கானை

சரத் குமார், விக்ரம், தேவயானி நடித்த

**விண்ணுக்கும் மண்ணுக்கும்**

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

**THE ITTALION JOB**

(சி-2262)

**அழகும், கலைத்துவமும் மிக்க நவீன முறையிலான நம்பகமான இடம்**

**சுரபி பதிப்பகம்**

பத்திரிகைகள் விழா மலர்கள் சஞ்சிகைகள், சுவரொட்டிகள், பிரசுரங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள் மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**சுரபி பதிப்பகம்**

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 2225107

# தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் 2004

| தேர்தல் மாவட்டம் | போட்டியிடும் கட்சிகள் | சுயேட்சைக் குழுக்கள் | போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | | அரசியற் கட்சி | சுயேட்சைக் குழு | |
| 1. கொழும்பு | 17 | 11 | 391 | 253 | 644 |
| 2. கம்பஹா | 14 | 10 | 280 | 200 | 480 |
| 3. களுத்துறை | 14 | 09 | 182 | 117 | 299 |
| 4. கண்டி | 14 | 09 | 210 | 135 | 345 |
| 5. மாத்தளை | 14 | 06 | 112 | 48 | 160 |
| 6. நுவரேலியா | 14 | 04 | 140 | 40 | 180 |
| 7. காலி | 12 | 09 | 166 | 117 | 273 |
| 8. மாத்தறை | 11 | 07 | 121 | 77 | 198 |
| 9. அம்பாந்தோட்டை | 10 | 08 | 100 | 80 | 180 |
| 10. யாழ்ப்பாணம் | 08 | 02 | 96 | 24 | 120 |
| 11. வன்னி | 10 | 09 | 90 | 81 | 171 |
| 12. மட்டக்களப்பு | 14 | 08 | 112 | 64 | 176 |
| 13. திகாமடுல்ல | 14 | 27 | 140 | 270 | 410 |
| 14. திருகோணமலை | 10 | 06 | 70 | 42 | 112 |
| 15. குருணாகல் | 15 | 10 | 285 | 190 | 475 |
| 16. புத்தளம் | 14 | 12 | 164 | 132 | 286 |
| 17. அனுராதபுரம் | 11 | 06 | 121 | 55 | 176 |
| 18. பொலனறுவ | 09 | 10 | 72 | 80 | 152 |
| 19. பதுளை | 11 | 07 | 121 | 77 | 198 |
| 20. மொனராகல | 12 | 07 | 96 | 56 | 152 |
| 21. இரத்தினபுரி | 12 | 07 | 156 | 91 | 247 |
| 22. கேகாலை | 13 | 09 | 156 | 108 | 264 |
| மொத்தம் | 273 | 192 | 3381 | 2337 | 5718 |

## தேர்தல் களம்







## மாவட்ட வாரியாக மொத்த வாக்காளர்

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 6 44,279 | குருநாகல் | 10 89,482 |
| கொழும்பு | 14 67,751 | புத்தளம் | 4 12,474 |
| கம்பஹா | 13 27,145 | அனுராதபுரம் | 5 14,149 |
| களுத்துறை | 7 46,138 | பொலநறுவ | 2 54,061 |
| மகாநுவரை | 8 80,632 | பதுளை | 5 11,115 |
| மாத்தறை | 3 12,556 | இரத்தினபுரி | 6 47,035 |
| நுவரேலியா | 4 36,236 | காலி | 7 16,608 |
| வன்னி | 2 26,604 | மாத்தறை | 5 50,503 |
| மட்டக்களப்பு | 3 03,928 | அம்பாந்தோட்டை | 3 84,361 |
| திகாமடுல்ல | 3 79,044 | மொனறாகலை | 2 62,742 |
| திருகோணமலை | 2 24,307 | கேகாலை | 5 70,299 |

## 2004 தேர்தலில் போட்டியிடும் கட்சிகள்

1. ஐக்கிய தேசிய முன்னணி
2. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
3. ஜாதிக ஹெல உறுமய
4. சிங்கள மகா சம்பத பூமி புத்ர கட்சி
5. ஐக்கிய லலித் முன்னணி
6. ஐக்கிய சோசலிசக் கட்சி
7. லிபரல் கட்சி
8. சுவராஜிய கட்சி
9. புதிய இடது சாரி முன்னணி
10. இலங்கை தேசிய முன்னணி
11. இலங்கை முற்போக்கு முன்னணி
12. மலையக மக்கள் முன்னணி
13. தேசிய அபிவிருத்தி முன்னணி
14. றுகுனு ஜனதாக் கட்சி
15. ஐக்கிய முஸ்லிம் மக்கள் முன்னணி
16. இலங்கை தமிழரசுக்கட்சி
17. சிறிலங்கா முஸ்லிம் கட்சி
18. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
19. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
20. ஐக்கிய இலங்கை ஜனநாயகக் கட்சி
21. தேசிய ஜனதாக் கட்சி
22. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி
23. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
24. ஐக்கிய இலங்கை ஜனநாயகக் கட்சி

## 2001 தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்குகள்

| கட்சிகள் | மொத்த வாக்கு | சதவீதம் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 4,069,937 | 45.6% |
| பொதுஜன ஐக்கிய முன்னணி | 3,329,695 | 37.3% |
| ஜே.வி.பி | 815,343 | 9.1% |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 346,610 | 3.9% |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 102,984 | 1.2% |
| ஈ.பி.டி.பி | 71,955 | 0.8% |
| சிஹல உறுமய | 50,653 | 0.6% |
| புதிய இடது சாரி முன்னணி | 45,845 | 0.5% |
| ஜனநாயக மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி | 16,457 | 0.2% |
| ஐக்கிய சோசலிசக் கட்சி | 9,326 | 0.1% |
| தேசிய ஜனநாயகக் கட்சி | 6,952 | 0.1% |
| ஜனநாயக இடதுசாரி முன்னணி | 6,212 | 0.1% |
| ஐக்கிய லலித் முன்னணி | 3,851 | 0.0% |
| ஐக்கிய சிங்கள மகா சபா | 2,771 | 0.0% |
| முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி | 2,644 | 0.0% |
| சிங்கள மகா சம்பத பூமிபுத்ர கட்சி | 1,630 | 0.0% |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | 1,624 | 0.0% |
| மக்கள் சுதந்திர முன்னணி | 1,361 | 0.0% |
| லிபரல் கட்சி | 1,151 | 0.0% |
| றுகுனு ஜனதாக் கட்சி | 1,087 | 0.0% |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | 978 | 0.0% |
| இலங்கை முற்போக்கு முன்னணி | 854 | 0.0% |
| இலங்கை முஸ்லிம் கட்சி | 802 | 0.0% |
| இலங்கை தேசிய முன்னணி | 719 | 0.0% |
| சோசலிச சமத்துவக் கட்சி | 243 | 0.0% |
| ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி | 30 | 0.0% |

| | | |
|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் | 12,428,208 | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 9,424,787 | 75.83% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 491,427 | 5.21% |
| செல்லுபடியான வாக்குகள் | 8,933,360 | 94.79% |

## மாவட்ட வாரியாக கட்சிகள் பெற்ற ஆசனங்கள் ~ 2001

| மாவட்டம் | ஐ.தே.க. | பொ.ஐ.மு. | ஜே.வி.பி. | த.வி.கூ. | மு.கா. | ஈ.பி.டி.பி. | புளொட் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. கொழும்பு | 12 | 7 | 2 | 0 | - | 0 | - | 21 |
| 2. கம்பஹா | 9 | 7 | 2 | - | - | - | - | 18 |
| 3. களுத்துறை | 5 | 4 | 1 | - | - | - | - | 10 |
| 4. கண்டி | 7 | 4 | 1 | - | - | - | - | 12 |
| 5. மாத்தளை | 3 | 2 | 0 | - | - | - | - | 5 |
| 6. நுவரேலியா | 5 | 2 | 0 | - | - | - | - | 7 |
| 7. காலி | 5 | 4 | 1 | - | - | - | - | 10 |
| 8. மாத்தறை | 4 | 3 | 1 | - | - | - | - | 8 |
| 9. அம்பாந்தோட்டை | 4 | 2 | 1 | - | - | - | - | 7 |
| 10. யாழ்ப்பாணம் | 1 | - | 0 | 6 | 0 | 2 | 0 | 9 |
| 11. வன்னி | 2 | 0 | 0 | 3 | - | 0 | 1 | 6 |
| 12. மட்டக்களப்பு | 0 | 1 | 0 | 3 | 1 | 0 | 0 | 5 |
| 13. திகாமடுல்ல | 1 | 2 | 0 | 1 | 3 | 0 | - | 7 |
| 14. திருகோணமலை | 2 | 1 | 0 | 1 | - | 0 | - | 4 |
| 15. குருணாகல் | 8 | 6 | 1 | - | - | - | - | 15 |
| 16. புத்தளம் | 4 | 3 | 0 | - | - | - | - | 7 |
| 17. அனுராதபுரம் | 4 | 3 | 1 | - | - | - | - | 8 |
| 18. பொலனறுவ | 3 | 2 | 0 | - | - | - | - | 5 |
| 19. பதுளை | 5 | 3 | 0 | - | - | - | - | 8 |
| 20. மொனராகல | 2 | 3 | 0 | - | - | - | - | 5 |
| 21. இரத்தினபுரி | 5 | 4 | 1 | - | - | - | - | 10 |
| 22. கேகாலை | 5 | 3 | 1 | - | - | - | - | 9 |
| தேசியப்பட்டியல் | 13 | 11 | 3 | 1 | 1 | 0 | 0 | 29 |
| மொத்தம் | 109 | 77 | 16 | 15 | 5 | 2 | 1 | 225 |

# பாகிஸ்தான் மண்ணில் முதன்முதலாக இந்திய அணி டெஸ்ட் போட்டியில் வெற்றி



இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் முல்தானில் நேற்றுடன் நடந்துமுடிந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா ஒரு இனிங்ஸ் 52 ஓட்டங்களால் பாகிஸ்தானைத் தோற்கடித்து வரலாற்று ரீதியான வெற்றியொன்றை பாகிஸ்தான் மண்ணில் பெற்றுள்ளது.

முன்னதாக, நான்காம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 9 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தான் அணி, நேற்றைய ஐந்தாம்நாள் ஆட்டத்தில் இரண்டு ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் யுகானாவின் விக்கெட்டை இழந்து 216 ஓட்டங்களையே பெற்றது. இதனால், பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இனிங்ஸிலும் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 216 ஓட்டங்களையே பெறமுடிந்ததால் தோல்வியைத் தழுவியது. யுகானாவின் நேற்றைய விக்கெட்டை கைப்பற்றியவர் இர்பான் பதான்.

இந்தியா தனது முதல் இனிங்சில் 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 675 ஓட்டங்க்ளை எடுத்தநிலையில் ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது.

இதில் ஷேவாக் 309, ஆகாஷ் சோப்ரா 42, லக்ஸ்மன் 29, யுவராஜ் சிங் 59, டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் 194 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர். இதில் டெண்டுல்கரை இரட்டைச்சதம் எடுக்கவிடாது ஆட்டத்தை இடைநிறுத்தியது தொடர்பாக இந்திய அணியின் பதில்தலைவர் ராகுல் ராவிட் மீது விமர்சனம் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்பின் தனது முதல் இனிங்ஸை ஆடிய பாகிஸ்தான் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 407 ஓட்டங்களையே பெற்றது. இதில் யாசீர் ஹமீட் 91, இன்சமாம் உல் ஹக் 77, யுகானா 35, அப்துல் ரஸாக் 47, இம்ரான் பர்கத் 38, தபீக் உமர் 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பதான் 4, கும்ளே மற்றும் டெண்டுல்கர் இருவரும் தலா 2, சகீர்கான், பாலாஜி இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்திய அணியைவிட முதல் இனிங்ஸில் பாகிஸ்தான் அணி குறைந்தளவான ஓட்டங்களைப் பெற்றதால் இரண்டாவது இனிங்ஸை ஆடப் பணிக்கப்பட்டது.

இதன்படி, தனது இரண்டாவது இனிங்ஸை ஆடிய பாகிஸ்தான் அணி, தனது இரண்டாவது இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றதால் தோல்வியைத் தழுவியது. பாகிஸ்தான் அணியின் இரண்டாவது இனிங்ஸ் தோல்விக்கு இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே முக்கிய பங்காற்றியிருந்தார்.

பந்துவீச்சில் - இர்பான் பதான் 21 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், கும்ளே 30 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டமற்ற ஓவர்களுடன் 72 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் யுவராஜ் சிங் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஷேவாக் தெரிவானார்.

இந்த வெற்றி தொடர்பாக, அணித்தலைவர் ராகுல் ராவிட் தெரிவிக்கையில் -

பாகிஸ்தான் அணியை முதன் முறையாக வென்றதையிட்டு நாம் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளோம். இது ஒரு பெரியவெற்றி. இந்த வெற்றியைக் கொண்டாட நாம் அனவைரும் பிறிதொரு நேரத்தை ஒதுக்கவேண்டும். அத்துடன், இந்த வெற்றி ஒரு உறுதியானதாகும். ஆனால், அடுத்து வரும் போட்டிகளில் பாகிஸ்தான் அணி உறுதியாக விளையாடும் என்பதும் எமக்குத் தெரியும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பாகிஸ்தான் மண்ணில் இந்திய அணி இதுவரை 20 போட்டிகளில் விளையாடி 5 போட்டிகளில் தோல்வியைத் தழுவியதுடன் 15 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

# மொயின்கானுக்கு அபராதம் விதிப்பு



இந்தியாவுக்கெதிரான முதல் டெஸ்ட் 2 ஆவது இனிங்ஸில் பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் மொயின கான், இர்பான் பதான் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். அவுஸ்ரேலிய நடுவர் சைமன் டப்பில் இந்த எல்.பி.டபிள்யூவைக் கொடுத்தார்.

நடுவரின் முடிவால் மொயின் கான் அதிருப்தி அடைந்தார். 'அவுட்' கொடுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர் சிறிதுநேரம் ஆடுகளத்திலேயே நின்றார்.

மொயின்கானின் இந்தச் செயல் வீரர்களின் நடத்தை விதிகளுக்கு எதிரானது. இதைத் தொடர்ந்து அவரை விசாரணைக்கு ஆஜராகுமாறு போட்டி நடுவர் மடுகல்லே அறிவித்தார். இந்த விசாரணையில் மொயின்கான் பங்கேற்றார். பயிற்சியாளர் மியான்டட், மனேஜர் ஆருண ரஷீத் ஆகியோரும் இந்த விசாரணையில் கலந்துகொண்டனர்.

விசாரணை முடிவில் மொயின் கானுக்கு போட்டியில் இருந்து பெறும் பணத்தில் 75 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# மைதான நுழைவாயிலுக்கு ஷேவாக்கின் பெயர் தெரிவு!

(டெல்கி)

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் பாகிஸதானுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் 309 ஓட்டங்களைக் குவித்தார். இந்த நிலையில் ஷேவாக்கை கௌரவிக்கும் வகையில் புதுடெல்கியில் உள்ள கோட்லா மைதானத்தின் நுழைவாயில் ஒன்றுக்கு ஷேவாக்கின் பெயர் சூட்டப்படும் என்று மாவட்ட கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது. அத்துடன், புது



டெல்கியைச் சேர்ந்த முன்னாள் வீரர்கள் பட்டோடி, பிஷன்சிங் பேடி, மொகிந்தர் அமர்நாத் ஆகியோரது பெயர்களும் மற்ற நுழைவாயில்களுக்கு சூட்டப்படவுள்ளன.

# விளையாட்டு

# ராகுலுக்கு எதிராக போட்டியிட மாட்டோம்

## சமாஜ்வாதி கட்சி தெரிவிப்பு



(டெல்கி)

உத்தரப்பிரதேச மாநிலம் அமேதி தொகுதியில் சோனியா காந்தியின் மகன் ராகுல் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். இவரை எதிர்த்துப் பாரதீய ஜனதா வேட்பாளரை நிறுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள பலம் வாய்ந்த கட்சியான சமாஜ்வாதி கட்சியும் ராகுலுக்கு எதிராகப் போட்டியிடலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் அமேதி தொகுதியில் வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை என்று அந்தக் கட்சி முடிவு செய்துள்ளது. ஆனால், அதற்கு நிபந்தனை ஒன்று விதித்துள்ளது.


அதன்படி பிரதமர் வாஜ்பாய் போட்டியிடும் லக்னோ தொகுதியில் நிறுத்தப்பட்டுள்ள சமாஜ்வாதி வேட்பாளரை காங்கிரஸ் ஆதரிக்கவேண்டும்.

இந்த நிபந்தனையை காங்கிரஸ் ஏற்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இதுபற்றி சமாஜ்வாதி பொதுச் செயலாளர் அமர்சிங் கூறியதாவது-

எங்களது நிபந்தனை பற்றி முடிவு எடுக்கவேண்டியது காங்கிரஸ்தான். அவர்கள் எடுக்கும் முடிவுக்கு ஏற்ப, ராகுலுக்கு எதிராக வேட்பாளரை நிறுத்துவதா? வேண்டாமா? என்பது முடிவு செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

# டெண்டுல்கரை இரட்டைச் சதமடிக்க முல்தான் டெஸ்டில் விட்டிருக்க வேண்டும்!

## அவுஸ்ரேலிய அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் தெரிவிப்பு



டெண்டுல்கரை இரட்டைச் சதம் அடிக்க விட்டிருக்க வேண்டுமென்று அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக முல்தானில் நடந்துவரும் முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் இனிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 675 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் கப்டன் ராவிட் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார்.

அப்போது டெண்டுல்கர் 194 ஓட்டங்களுடன் களத்தில் நின்றார். அவர் இரட்டைச் சத்தை அடிக்க 6 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்ட நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்த முடிவு எடுக்கப்பட்டது மிகுந்த சர்ச்சையை எழுப்பியுள்ளது.

இந்த முடிவு தனக்கு அதிர்ச்சியாக இருந்தது என்று வெளிப்படையாக டெண்டுல்கர் தெரிவித்தார்.

இந்த நிலையில் டெண்டுல்கருக்கு ஆதரவாக அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது -

எனது அணியின் துடுப்பாட்ட வீரர் 194 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இருந்தால், நான் நிச்சயம் இந்த முடிவை எடுத்திருக்கமாட்டேன். குறிப்பாக, முல்தான் டெஸ்டில் அந்த நிலையில் ஆட்ட இடைநிறுத்த முடிவு அவசியமற்றது.

டெஸ்ட் போட்டியின் அந்த நிலையில், டெண்டுல்கர் இரட்டைச் சதத்தை அடிக்க விட்டிருக்க வேண்டும். 6 ஓட்டங்களை அடிக்க அவருக்குக் கூடுதலாக 2 ஓவர்தான் தேவைப்பட்டிருக்கும். அத்துடன் ஷேவாக் 300 ஓட்டங்களைத் தாண்டியது சிறப்பான சாதனையாகும் என ரிக்கிபொண்டிங் கூறினார்.

# வாஜ்பாயை எதிர்த்துப் போட்டியிட மீண்டும் தயாராகும் ராம்ஜெத்மலானி



பிரதமர் வாஜ்பாய்க்கு எதிராகப் போட்டியிடமாட்டேன் என்று அறிவித்த ராம்ஜெத்மலானி முடிவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வாஜ்பாயை எதிர்த்துப் போட்டியிட அவர் மீண்டும் தயார் ஆகின்றார்.

உத்தர்ப் பிரதேச லக்னோ தொகுதியில் பிரதமர் வாஜ்பாய் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்துப் போட்டியிட முன்னாள் மத்திய மந்திரியும், பிரபல சட்டத்தரணியுமான ராம்ஜெத்மலானி விருப்பம் தெரிவித்திருந்தார்.

வாஜ்பாயை எதிர்த்து, ராம் ஜெத்மலானி பொது வேட்பாளராகப் போட்டியிட காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்து இருந்தது.

ஆனால், வாஜ்பாய்க்கு எதிராகப் பொது வேட்பாளரை நிறுத்துவதில் எதிர்க்கட்சிகள் இடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. முக்கிய கட்சிகளான சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் ஆகிய கட்சிகள் லக்னோ தொகுதிக்கான தங்கள் வேட்பாளர்களை அறிவித்துவிட்டன. இதனால், வாஜ்பாயை எதிர்த்துப் போட்டியிடும் முடிவில் இருந்து ராம்ஜெத்மலானி பின்வாங்கினார்.

இந்தநிலையில் ராம்ஜெத்மலானியை முஸ்லிம் தலைவர்கள் மற்றும் சமூக சேவகர் சுவாமி அக்னிவேஷ் சந்தித்துப் பேசினார்கள். அப்போது, அவர்கள் லக்னோ தொகுதியில் ராம்ஜெத்மலானிக்கு ஆதரவு அளிப்பதாகத் தெரிவித்தனர்.

இதில் உற்சாகம் அடைந்த ராம்ஜெத்மலானியின் முடிவில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வாஜ்பாயை எதிர்த்துப் போட்டியிட அவர் மீண்டும் தயாராகின்றார்.

இதுபற்றி ராம்ஜெத்மலானி கூறுகையில் -

'என்னை எதிர்க்கட்சிகள் ஒற்றுமையுடன் ஆதரித்தால், நான் வாஜ்பாயை எதிர்த்து லக்னோ தொகுதியில் போட்டியிடுவேன். இது தொடர்பாக எனது நல்ல நண்பர் முலாயம் சிங் யாதவ், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி ஆகியோருடன் தொடர்புகொண்டு வருகிறேன்' என்று தெரிவித்தார்.

# ராமதாஸிற்கு எதிராகப் போட்டியிட நடிகர் ஆனந்தராஜ் தயாராகிறார்

(டெல்கி)

பாண்டிச்சேரி மக்களவைத் தொகுதியை காங்கிரஸ் கட்சிக்கு பா.ம.க விட்டுக்கொடுக்கவேண்டும். இல்லையென்றால் நானே சுயேட்சையாக அங்கு போட்டியிடுவேன் என்று நடிகர் ஆனந்தராஜ் கூறியுள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது -

பா.ம.க வேட்பாளர் ராமதாஸ் புதுவையைச் சேர்ந்தவர் என்றாலும் பா.ம.கவை புதுவை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

கடந்த தேர்தலில் பா.ம.கவுக்கு ஓட்டுப்போடாதீர்கள் என்று கூறிய காங்கிரசார் இப்போது ஓட்டு போடுங்கள் என்று சொல்கின்றனர். இதற்குக் காரணம் பா.ம.க நிறுவுனர் டாக்டர் ராமதாஸ்.

மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து பாண்டிச்சேரியை காங்கிரசுக்கு விட்டுத்தர ராமதாஸ் முன்வர வேண்டும். இல்லை அது முடிந்து போன கதை, அதைப்பற்றிப் பேச வேண்டாம் என்று கூறினால் புதுவை மக்களின் போர்வாளாக தளபதியாக இந்தத் தேர்தலில் நானே சுயேட்சையாக போட்டியிட வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

புதுவை மக்களுக்கு பரிச்சயமானவன் என்பதாலும் மக்களே என்னை நிறுத்துகிறார்கள் என்பதாலும் நூறு சதவீதம் நான் வெற்றி பெறுவேன். நான் போட்டியிட்டால் ரஜினியின் குறிக்கோளும் என் குறிக்கோளும் ஒன்றாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

### தலைமைத்துவ பயிற்சித் திட்டத்திற்கு

# இளைஞர் அமைப்புக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

ஜனநாயக இளைஞர் தலைமைத்துவ திட்டத்தின்கீழ், இளைஞர்களுக்கான பயிற்சிநெறிகளில் பங்குகொள்ள விரும்பும் இளைஞர் அமைப்புக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை மன்றக் கல்லூரியும் சுவீடன் நாட்டின் தேசிய இளைஞர் தாபனங்களும், சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனத்துடன் இணைந்து இத்தகைய பயிற்சிநெறிகளை நடத்தி வருகின்றது.

தொழிற்பயிற்சி, ஜனநாயகம் பற்றிய போதனைகள், சிந்தனை விருத்தி உள்ளிட்ட பல திட்டங்களைச் செயற்படுத்துவதற்காகவே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் இணைந்து பயன்பெறவிரும்பும் இளைஞர் கழகங்கள், மற்றும் அமைப்புக்கள் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

தொடர்புகொள்ள விரும்புவோர்- ஜனநாயக இளைஞர் தலைமைத்துவத் திட்டம், இலங்கை மன்றக் கல்லூரி, இலங்கை மன்றம், 100 சுதந்திர சதுக்கம், கொழும்பு - 07 எனும் முகவரியுடன் தொடர்புகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொலைபேசிமூலம் தொடர்புகொள்ள விரும்புவோர் 011-2695249 அல்லது 011-2691814 எனும் தொலைபேசி இலக்கங்களுடனே தொடர்புகொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, இந்தத் திட்டத்தில் இணைந்துகொண்ட இளைஞர்களுக்கான பயிற்சிநெறிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தில் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், இளைஞர் கழகங்கள், தொண்டர் நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் முதலானவை இணைத்துக்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.





இன்று நடைபெறும் தேர்தலுக்காக நேற்று யாழ்.செயலகத்திலிருந்து வாக்குப் பெட்டிகளை பொலிஸ் பாதுகாப்புடன் தேர்தல் ஆணையாளர்கள் எடுத்துச் செல்வதையும், யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து கோப்பாய் வலயம் 25 இன் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் என்.யோகராஜன் தேர்தல் சத்தியப் பிரமாணத்தினைப் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

## பார்வையற்றோரின் வேண்டுகோளை தேர்தல் ஆணையாளர் நிராகரித்தார்

(யாழ்ப்பாணம்)

தமது குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் தமது சார்பாக வாக்களிக்க அனுமதிக்கவேண்டுமெனக்கோரி, பார்வையற்றோர் விடுத்த வேண்டுகோளை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நிராகரித்தார்.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இவ்வாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்தது சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கையாகும். ஆனாலும், இது ஒரு மனிதநேய வேண்டுகோளாகும்.

அத்துடன், நாட்டின் சட்டங்களுக்கு அமையவே நான் செயற்படுகின்றேன். சட்டமும், அதனை நடைமுறைப்படுத்தலும் இருவேறு விவகாரங்களாகும்.

நீதியானமுறையில் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதை உறுதிப்படுத்தவேண்டும். இது தொடர்பான விதிகளை அறிமுகப்படுத்துவது நாடாளுமன்றின் செயற்பாடாகும்.

அத்துடன், தேர்தலில் வாக்களிக்கச் செல்லும்போது வாக்காளர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த அடையாள அட்டைகளைக் கொண்டுசெல்லவேண்டும்.

வாக்களிப்பு முடிந்ததும், வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் வந்தவுடன் அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

## தென்மராட்சி பிரதேச செயலக நடமாடும்சேவை ஏப்ரல் 3 ஆம் வாரம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் ஒவ்வொரு மாதமும் முதலாம் மூன்றாம் செவ்வாய்க்கிழமைகளில் கொடிகாமத்திலுள்ள சாவகச்சேரி பிரதேசசபை அலுவலகத்தில் நடாத்தப்படும் நடமாடும்சேவை - ஏப்ரல் மாதத்தின் 3 ஆம் செவ்வாய்க்கிழமை மட்டும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறும் பொதுத் தேர்தல் காரணமாக, முதலாம் இரண்டாம் திகதிகளில் செயலகம் மூடப்பட்டிருப்பதாலும், அடுத்த வேலை நாள் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஓய்வூதியம் மற்றும் சம்பளக் கெடுப்பனவுத் திகதியாக இருப்பதாலும், உள்ளக வேலைப்பளு காரணமாகவே இந்த முதலாவது செவ்வாய்க்கிழமையான 6 ஆம் திகதி நடமாடும் சேவை நடத்தப்படாது.

3 ஆம் செவ்வாய்க்கிழமையான 20.04.2004 இல் மட்டுமே இம் மாத நடமாடும்சேவை நடத்தப்பட்டு, மே மாதம் முதல் வழமைபோல 1 ஆம் 3 ஆம் செவ்வாய்க்கிழமைகளில் இந்த நடமாடும்சேவை நடை பெறும் எனவும் பிரதேச செயலகத் தினர் அறிவித்துள்ளனர்.

பொதுமக்கள் இதனைக் கருத்திற்கொண்டு தமது தேவைகளை நிறைவு செய்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (24)

## மின்னிணைப்பு வேலை செய்வோரால் மரங்கள் வெட்டி அழிக்கப்படுகின்றன

கைதடி - நுணாவில் வைரவர் கோயில் முன்றலிலுள்ள மிகப் பழமை வாய்ந்த அரசமரம் ஒன்றின் அரைவாசிக்கு மேற்பட்ட கிளைகள் மின்னிணைப்பு வேலைகளில் ஈடுபடுவோரினால் வெட்டியழிக்கப்பட்டுள்ளதுடன், இந்த ஆலய வேலியும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்திற்கு முன்பாக மட்டுவில் அம்மன் கோயில்வரை செல்லும் வீதிக்கு மின்னிணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டபோதே இடம்பெற்றுள்ளது.

வீதியின் எதிர்ப்பக்கத்தில் இந்த மின் இணைப்பை மேற்கொள்ள வசதி இருந்தபோதிலும், இந்த மரத்தை வெட்டிய செயல் - இந்தப் பகுதி மக்களை வேதனை கொள்ளச் செய்துள்ளது. வெயில் காலத்தில் பயணஞ் செய்யும் மக்களுக்கு ஆறுதல் தரும் நிழற்குடையாக விளங்கிய இந்த மரம் தறிக்கப்பட்டதனால், வதியால் செல்லும் பயணிகளும் பாதிபபுக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, இந்த வீதியில் உள்ள சின்னத்தம்பி என்பவருக்குச் சொந்தமான வளவில் நின்ற பெறுமதி வாய்ந்த வேப்பமரம் ஒன்றைக் குறுக்கே தறித்துவிழுத்தியுள்ளனர். காணியுரிமையாளர் தான் வேம்பினை வேரோடு தறிப்பதற்கு ஒப்பக் கொண்டபோதும், குறுக்கே தறித்து வீழ்த்திய பொறுப்பற்ற செயலினால் அந்த மரத்தை விறகுக்கே பயன்படுத்த வேண்டியுள்ளதெனவும் அவர் தெரிவித்தார். (24)

## வாக்காளர் அட்டை கிடைக்காதோர் பிரதம தபாலகத்திற்குப் படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் அட்டைகளைப் பெறச்சென்ற மக்கள் யாழ் - பிரதமதபாலகத்தில் இருந்து வெறும்கையுடன் திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகளுக்கு வந்து சேரவேண்டிய வாக்காளர் அட்டைகள் வராததால், வாக்காளர்கள் பிரதமதபாலகத்திற்குப் படையெடுத்தனர்.

அதன்போதே, தமது வாக்காளர் அட்டைகள் அங்கு இல்லை என்பது தெரியவந்தது. குருநகர் தண்ணீர்தாங்கி 3 ஆம் குறுக்கு வீதி மற்றும் ஜஸ்பிளாண்ட் வீதி ஆகியவற்றிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் வாக்காளர் அட்டைகள் அனுப்பப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வழமையாக வீடுகளுக்கு வந்துசேரும் வாக்காளர் அட்டைகள் தபாலகத்திற்குக்கூட வந்து சேரவில்லை . (206)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

1

நான்காவது அகவையில்



பெயர் : உ.கர்சன்

முகவரி : 35A, நகரசபை விடுதி மன்னார் வீதி, வவுனியா.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------

பெற்றோர் ஒப்பம்


## ஐஸ்கிறீம் விற்கும் வாகனங்களுக்கு விற்பனை உரிமம் இருக்கவேண்டும்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் பொங்கல் உற்சங்களில் ஐஸ்கிறீம் விற்கும் வாகனங்களுக்கான விற்பனை உரிமத்தினை கொண்டு வருமாறு - மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சிரேஷ்ட குமார் தெரிவித்தார்.

ஆலய உற்சவ தினங்களில் ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்களை வாகனத்தில் விற்பனை செய்பவர்கள் - கடந்த வருடம் அல்லது இந்த வருடம் பெறப்பட்ட விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் கொண்டு வரப்பட வேண்டும். அவ்வாறு உரிமத்தகடு கொண்டுவரும் விற்பனையாளர்கள் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்கள்.

அனுமதிப்பத்திரம் கொண்டுவராதவர்கள் - விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்(34)

## வரட்சி ஏற்பட்டுள்ள இடங்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குடிநீர் வரட்சி ஏற்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

காரைநகர், ஊற்காவற்துரை, வேலணை, நெடுந்தீவு, சாவகச்சேரி போன்ற பகுதிகளில் மக்கள் குடிநீர் அற்று தவிக்கின்றனர்.

இவர்களுக்குத் தேவையான குடி நீரின் அளவுகள், எந்த மாதம் வரை தேவை போன்ற விபரங்கள் ஒரு வாரத்திற்கு முன்பு திரட்டப்பட்டன.

குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு உதவி அரசாங்க அதிபரும், பிதேச செயலரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான நிதியைப் பின்பு சமுகசேவை அமைச்சு வழங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம், மக்கள் தமது குடிநீர் பற்றாக்குறைகளை ஓரளவு நிவர்த்தி செய்யமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தென்பகுதி கண்காணிப்பாளர்கள் மனித உரிமை ஆணைக்குழுவைச் சந்திப்பு

நாடாளுமன்ற பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த தென்பகுதி கண்காணிப்பாளர் 13 பேர் - நேற்றுமுன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பதிகாரியைச் சந்தித்து, குடாநாட்டு நிலைமைகள் குறித்து கலந்துரையாடினர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, தேர்தலில் குடாநாட்டு மக்களின் நிலைமை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வந்திருந்த இவர்கள் - தேர்தல் முடியும்வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபடவிருப்பதாகத் தெரிய வருகின்றது. (202)




# எதையும் சந்தோஷமாக ஏற்கும் மனம் வாழ்க்கை ஓட்டத்தில் நிம்மதியைத் தரும்


சி. இராஜேஸ்வரி

**யாழ்ப்பாணம் ஆனைப்பந்திச் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள உபதபாலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த சிறிபத்மநாதன் இராஜேஸ்வரி என்பவரைச் சந்தத்தோம். அவர் எம்முடன் பகிர்ந்துகொண்டவை -**

என்னிடம் என்ன சொல்ல இருக்கிறது. அந்த வானவெளியில் ஒன்றுமே இல்லை. பகலில் சூரியனையும், இரவில் நட்சத்திரங்களையும், சந்திரனையும் மழையையும் காட்டிக்கொண்டுதான் இருக்கின்றது. ஆகவே எல்லாப் பெண்களிடமும் ஏதோவொரு விதத்தில் திறமைகள் இருக்கின்றன. அதை வெளிக்கொணர்வதுதான் கஷ்டமாக இருக்கிறது. சமூகம் ஒத்துக்கொள்ளவேண்டும். பெண்கள் மீது பார்வைகள் நல்லவையாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் பெண்கள் எங்கே சென்றாலும் சுதந்திரமாகத் தமது முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளைத் தாமாகவே செய்யக்கூடியதாக இருக்கும்.

பெண்களுக்கு கல்வி முக்கியம். தொழிலுக்கும் கல்விக்கும் சம்பந்தமுண்டு. ஏனெனில், நாங்கள் படிக்கின்ற கல்வியில்தான் எமது சிந்தனைகள் வளர்கின்றது, அறிவுத்திறன் வளர்கின்றது. ஆகவே, எமது வாழ்வின் ஆரம்பமே கல்வியில் பெறக்கூடியதாக இருக்கின்றது. இதன் அடிப்படையில்தான் எந்தத் தொழிலானாலும் இலகுவாக மேற்கொள்ளமுடிகிறது. தொழில்கள் வித்தியாசப்படலாம். ஆனால், அதனைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு கல்வி அவசியம். இன்றைய காலத்துப் பெண்கள் கல்வியில் ஆர்வமுள்ளவர்களாகத்தான் இருக்கின்றார்கள். ஆனால், எதற்காகப் படிக்கின்றோம் என்பதை எண்ணி, அதற்கான வழியினை மேற்கொள்ளாமல் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற சிந்தனையில்தான் இருக்கின்றார்கள்.

மற்றையவர்கள் மீது எங்கள் பார்வை விழுவதால்தான், இன்று நாங்களும் அவர்கள்போல் வர வேண்டும் என்றொரு ஆசை மனதில் இருக்கின்றது. வருமானத்திற்கு அதிகமாகச் செலவு செய்யாது, வருமானத்திற்கு ஏற்றவாறு தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் எமது வாழ்க்கை மேலும் வளர்ந்து வரும்.

நான் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் படித்தேன். அந்தக் காலங்களில் என்னை மேலும் முன்னேறவைத்த காரணம் - நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடைப்பட்ட வாயிலில் அந்தப் பகுதி அமைந்ததால், பின்விளைவுகளை எதிர்கொள்ளாமல் முன்னேற்பாடாக என்னை நானே தயார்ப்படுத்திக் கொள்ள முடிந்தது. நான் வாழ்ந்த சூழலும் இதற்குக் காரணமாக அமைந்தது.

சமூகத்தில் மனிதனைப் பார்க்கின்ற விதம் வித்தியாசம். அதாவது உயர்ந்த மரியாதையுள்ள அரசாங்க வேலையில் இருந்தால்தான் நாலு பேர் மதிப்பார்கள் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் இருக்கின்றது. அது தவிர்க்கமுடியாததொன்று. இது எமது சமூகத்தின் பார்வையாகும். இதனால்தான் இன்று எல்லோரும் நல்ல மரியாதையுள்ள அரசாங்க வேலை எடுக்கவேண்டும் என்று நினைத்து, ஒரு வேலையும் இல்லாமல் வீட்டில் இருக்கின்றார்கள்.

வெளிநாடுகளில் யார் என்ன வேலை செய்கின்றான் என்று யாருக்குமே தெரியாது. ஏனெனில், எல்லா வேலையையும் சமமாகத்தான் பார்க்கின்றார்கள். அதனால்தான், அந்த நாடுகளில் வேலையில்லாப் பிரச்சினை இல்லை. இதனால், நாடும் வளர்ந்து வருகின்றது. ஆனால் இங்கே கௌரவம், அந்தஸ்து என்று சொல்லி தங்களைத் தாங்களே கஷ்டத்திற்குள் தள்ளுகின்றார்கள்.

கூட்டுக்குடும்பமாக இருந்தாலும், தனிக்குடும்பமாக இருந்தாலும் புரிந்துணர்வு முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. எந்தப் பிரச்சினையையும் முளையிலேயே கிள்ளி எறியக்கூடியதாக இருக்கின்றது. நாங்கள் அன்றாடம் பழகுபவர்களுடனும், நண்பர்களுடனும், உறவினர்களுடனும் புரிந்துணர்வுடன் பழகிக்கொள்ள வேண்டும். எனது குடும்பத்தை எடுத்துக் கொண்டால் எனது கணவர் ஒத்தாசையாக இருக்கின்றார். நான் அன்றாடம் செய்யும் வீட்டு வேலைகளை அவரும் என்னோடு சேர்ந்து செய்கின்றார். புரிந்துணர்வுதான் இதற்குக் காரணம். நாங்கள் இருவரும் வேலைக்குச் சென்று மறுபடியும் வீட்டுக்கு வந்து வீட்டுவேலைகள் செய்கின்றோம்.

எனது வேலையைப் பொறுத்தவரையில் வருகின்ற கடிதங்களை தலைமை தபாலகத்திற்கு உடனுக்குடன் அனுப்பியும், ஏழைகளுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவிக்கொடுப்பனவை எடுத்துக் கொடுப்பதாலும் திருப்தி அடைகின்றேன். தொழிலுக்கு மேலாக சமூகத்தின் சேவையாக இதை உணரமுடிகிறது. பிரிந்திருக்கும் உறவுகளை தொடர்புகொள் ளச் செய்வது தபாலகமாகும். உறவுகள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதால் எமக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

மாதாந்த உதவிப்பணம் வாங்க வருபவர்களை பார்த்தால் எனக்குக் கவலையாக இருக்கின்றது. மாதம் நூறு ரூபாவை மட்டும் அவர்களுக்குக் கொடுக்கும்போது, அது ஒரு நாளைக்கே போதுமானதாக இல்லை. இதையும் வாங்க 83 பேர் வரும்போது, தொகையினைக் கூட்டிக் கொடுப்பார்களா என நானும் நினைத்ததுண்டு. மாதம் மாதம் வரும் ஏழைகள் என்னிடம் கேட்பதுண்டு - எப்பொழுது பணத்தினைக் கூட்டுவார்கள் என்று. நான் என்ன சொல்ல, என்ன செய்ய. எல்லாம் கிராமசேவகரின் கையில்தான் இருக்கின்றது. அந்த ஊர் கிராமசேவகர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? இந்த ஏழைகளுக்கு விடிவுகிட்டுமா? என எனக்குள்ளே அடிக்கடி நினைப்பதுண்டு. என்னைப்போல இந்த நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களும் நினைப்பார்களா?

குடும்பத்தின் நிம்மதி என்பது வாழ்க்கை ஓட்டத்தில் எதையும் சந்தோஷமாக ஏற்று கிடைப்பதற்கேற்ப அதில் திருப்திகண்டு, அதன் வழியே அவசரமல்லாமல் மெதுவாக முன்னேற வேண்டும். பெண்ணாகிய நாம் அவசரமாக எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடியும் எமக்குத்தான் தீங்காக அமையும். அதாவது எமது தகுதிக்கு ஏற்றமாதிரி கணவனைத் தெரிந்தெடுத்தல் அல்லது எமது தகுதிக்குமேலான கணவனைத் தேர்ந்தெடுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கணவன் - மனைவி இருவரின் அணுகுமுறையும், பார்வையும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பும்தான் - அவர்களின் வாழ்க்கையில் சந்தோஷத்தினை ஏற்படுத்தும். இருக்கின்ற சீதனத்தைக் கொடுத்து எனது திருமணம் நடந் தது. இதற்கு மேலதிகமாக எனது கணவரும் சீதனம் கேட்கவில்லை. எமது வாழ்க்கைக்கு சீத னம் தேவைதான். ஆனால் தேவைக்கு அதிகமாக சீதனம் கேட்கக்கூடாது. மருத்துவராக இருந் தாலோ அல்லது என்ஜினியராக இருந்தாலோ, தொழிலதிபராக இருந்தாலோ 40, 50 இலட்சம் எனக் கேட்கின்றார்கள். இவ்வளவு தொகையி னைக் கொடுத்தும் திருமணம் செய்யவும் பெண் கள் இருக்கிறார்கள். இவர்கள் இருக்கின்ற இந்தச் சமூகம் என்றைக்கும் திருந்தாது.

சந்தேகம் எல்லோரிடமும் இன்னும் நிறையவே இருக்கின்றது.

வாழ்க்கையில் பெண் மீது ஆண் சந்தேகப் பேர்வழியாகத்தான் இருக்கின்றான். எனது கணவர் வேலை செய்யும் இடத்தில் நிறையப் பெண்களும் வேலை செய்கின்றார்கள். ஆகவே, அவருக்குத் தெரியும். எனவே சின்னக் கீழ்த்தரமான எண்ணங்கள் - அறிவு, சிந்தனை இல்லாதவர்களிடம் நிறையவே இருக்கின்றன. அறிவு சிந்தனை உள்ளவர்களிடமும் இருக்கின்றது. கூடுதலாக அன்பு பாசம் வைப்பதாலும் இந்தச் சந்தேகம் எம்மில் தொற்றிக்கொள்கிறது. ஆகவே எதையும் ஒரு அளவில் நின்றுபார்த்து அதனைச் செயற்படுத்தி, அதனூடாக புரிந்துணர்வினை ஏற்படுத்தி எமது வாழ்க்கையினை நகர்த்துகின்றோம். அதனால் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் போய்விடும் என்று சொல்லி முடித்தார்.

நேர்காணல் - செல்வா.

# கண்களை



எம்முடைய முகத்திற்கு அழகையும், கவர்ச்சியையும் கொடுப்பதில் முதலிடம் வகிப்பது நமது கண்களே. எனவே, நாம் அந்தக் கண்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதுடன், அதை சிறந்தமுறையில் பராமரிப்பதாலும், நாம் சிறந்த அழகான கண்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கண்களை ஆரோக்கியமாக வைத்திருப்பது எப்படி?

ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த நீரை நிரப்பி, அதில் கண்கள் படுமாறு முகத்தை வையுங்கள். சில விநாடிகள் கழித்து மீண்டும் அதுபோல் செய்யுங்கள். கண்களை இடது வலதுமாக பத்துமுறை சுழற்றுங்கள். கண்களை முடிந்தளவு நன்றக விரியுங்கள். பின் முடிந்த அளவு

# கண்களாகப் பேண

இறுக்கி மூடுங்கள். இவ்வாறு ஒரு நாளைக்கு பத்துமுறை செய்து வாருங்கள். அத்துடன், தூரத்தில் இருக்கும் பசுமை நிற மரங்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாருங்கள். இது உங்கள் கண்களுக்கு நிறைவு, ஓய்வு கொடுக்கும்.

எமது கண்களை அழகுபடுத்த - நாம் வாங்கும் அழகு சாதனப்பொருட்கள் தரமானவைகளாக இருத்தல் வேண்டும். விலை குறைவு என்பதற்காக கண்ட கண்ட பொருட்களை எல்லாம் வாங்கிப் பயன்படுத்தாதீர்கள்.

ஐபிரோ பென்சில், ஐஷடோ ஆகியவற்றை இரவல் வாங்கிப் பாவிக்காதீர்கள். இது தொற்றுநோய்களுக்கு வழி வகுக்கும். இளமையிலே கண் பார்வை குறைபாடு உடையவர்கள் கண்ணாடி அணியத் தயங்குகிறீர்களா? அது உங்களின் கண்களை மேலும் பாதிக்கலாம். ஆனால், உங்களின் முக அமைப்பிற்குப் பொருத்தமான கண்ணாடியைத் தெரிவு செய்யுங்கள். வெயில் காலங்களில் வெளியில் சென்று வந்ததும் முகம் கறுத்தும், கண்கள் சோர்ந்தும் காணப்படுகின்றதா?

வெள்ளரித் துண்டை வட்ட வடிவமாக நறுக்கி கண்களின் மேல் வைத்து சிறிது நேரம் அப்படியே இருங்கள். வெள்ளரிக்காய் கிடைக்காதவர்கள் பஞ்சை எடுத்து பன்னீரில் தோய்த்து, கண்களை மூடி அதன் மேல் சிறிது நேரம் வைத்துக்கொள்ளலாம்.

கரட், உருளைக்கிழங்கு இரண்டையும் பச்சையாக நன்கு அரைத்து, முகத்தில் பத்துப்போல் போட்டுக்கொண்டு சிறிது நேரம் கழித்து குளிர் நீரில் கழுவுங்கள். உங்கள் முகம் பொலிவுடன் காட்சியளிக்கும் அத்துடன், கண்களைச் சுற்றியுள்ள கருவளையம் நீங்கும்.முட்டையை நன்கு கலக்கி, மேல் நோக்கி முகத்தில் தடவி 15 அல்லது 20 நிமிடங்கள் கழித்து முகத்தைக் கழுவவேண்டும். இவ்வாறு செய்வது கண்களுக்கும் நல்லது.

முகம் வரண்டு காணப்பட்டால் - கண்கள் தன் பொலிவை இழந்துவிடும். அதனால், இரவு படுக்கைக்குப் போகும் முன் ஒரேஞ்சாறு கலந்து ஏதாவது ஒரு கிறீமை முகத்தில் பூசி வந்தால் வரட்சி குறையும். இதற்கு விற்றமின் E கலந்த கிறீம்களே சிறந்தது.

தினமும் பால் அருந்துவதன் மூலம் புருவத்தின் முடி உதிர்வதைத் தவிர்க்கலாம். அதுபோல் குளிக்கும் முன்னர் ஒரு சொட்டு தேங்காய் எண்ணையை புருவத்தில் தடவிக் கொள்வதும் சிறந்தது.

கண் இமைகளில் ஐஷடோவை பூசுவதற்கு முன்னர், கொஞ்சம் பவுடரைப் பூசிய பிறகு லேசாக ஐஷடோவைப் பூசிக்கொள்ளுங்கள். குழி விழுந்த கண்களை உடையவர்கள் ஐஷடோவைப் போட்டால், இன்னும் கண்களை ஆழமாகக்காட்டும். எனவே, அவர்கள் ஐஷடோவைத் தவிர்ப்பது நல்லது. வெளியில் துருத்திய விழிகளைக் கொண்டவர்கள் பழுப்பு நிற ஐஷடோக்களை உபயோகப்படுத்தலாம். கருமையான விழிகளைக் கொண்டவர்கள் நீலம், பச்சை, சொக்லெட் நிறங்களைப் பயன்படுத்துதல் சிறந்தது.




# மருத்துவப் பயன்கள்

1. மலச்சிக்கலைப் போக்கும்.
2. குழந்தைகள் தினம் தோறும் அருந்தினால் கல்சியம், மக்னீயசிம் அளவு அதிகமாகி உடலுக்கு நல்ல வலிமை தரும்.
3. பாலுடன் கலந்து கொடுத்தால் இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு அதிகமாகும்.
4. தினமும் படுக்கைக்குப் போகும் முன்பு ஒரு தேக்கரண்டி தேனைக்குடித்து வந்தால் தூக்கத்தில் சிறுநீர் கழிக்கும் பழக்கம் குணமாகிவிடும்.
5. அரை எலுமிச்சைப் பழச்சாறும் இரண்டு கரண்டி தேனும் ஒரு பால்கோப்பை கலந்து அருந்தி வந்தால் எல்லாவித ஒவ்வாமை வியாதிகளும் குணமடையும்.
6. இரப்பை குடல் புண்களை தேன் குணப்படுத்தும்.
7. தேன் விரைவில் செரிப்புத்தன்மையை உண்டாக்கும்.
8. வயதானவர்களுக்கு ஏற்படும் தசைகளில் வலி, கால்கள் பாதங்களில் பிடிப்பு முதலியன தேனை அருந்துவதால் நீங்குகிறது.
9. காலை இரவு 4 கரண்டி தேனை அருந்தி வந்தால் உடல் பருமன் வலிவு குறையாமல் இளைக்கும்.

10 தூக்கம் ஏற்படுவதற்கு தேன் அருமையான மருந்தாகும்.



# பிஞ்சுமுகத்தின் தேடல்

எனக்கு அந்த முகத்தைப் பார்க்கப் பயமாக இருக்கு. கறுத்த உருவம், முகத்தில் சிரிப்பில்லை. அம்மா அந்த முகத்தைப் பாராமலே குனிந்து நின்றுகொண்டிருந்தாள். அந்தவேளையில் என்னைப்போலச் சின்னஞ் சிறுமிகள் சிரித்துக்கொண்டே வந்தார்கள்.

வாசலுக்கு வெளியே நின்ற எனக்கு அவர்களைப் பார்க்க மகிழ்ச்சி பொங்கிவந்தது. எண்டாலும் நடக்கப்போறதை நினைக்கப் பாவமாக இருந்தது. நான் ஒதுங்கி அவர்களுக்கு வழிவிட்டேன். நாலுபேரும் துள்ளிக்கொண்டே உள்ளே போனார்கள். திடீரென்று அந்த உருவம் எழும்பியது. அந்த முகம் கரிச்சட்டியில் எண்ணெய் கொதிப்பதுபோல... நான் எட்டிப் பார்த்தேன். இடிக்குரல் கேட்டது.

என்னத்துக்கு குதிச்சுக்கொண்டு வாறியள்! இங்கை உங்களுக்கு என்ன வேலை!... இஞ்சை வரவேண்டாம் எண்டு எத்தனைதரம் சொல்லுறது! போங்கோ வெளியாலை! சீனவெடி கொளுத்திப்போட்டதுபோல அந்த உருவம் படபடவென்று வெடித்தது. உள்ளேபோன நால்வரும் ஒன்றாக காற்றுப்போன பலூன் போன்று சுருங்கிப்போன முகத்தோடு தலையைத் தொங்கப்போட்டபடியே வெளியே முண்டியடித்துக்கொண்டு வந்தார்கள்.

வாசலில் கிடந்த சாக்குத் தடக்கி ஒருத்தி படாரென்று விழுந்தாள். மற்ற மூவரும் பதறிய ...டி அவளின் கையைத் தூக்கி எழுப்பி ...ட்டார்கள். அந்தப் பிள்ளையின் முகத்தைப் பார்த்தேன். விழுந்த வலி தெரியவில்லை. மற்றப்பிள்ளைகள் அவளுடைய சட்டையில் ஒட்டிய... மண்ணைத் தட்டிவிட்டார்கள். போகும்போது ஒருத்தி சொன்னாள் புதுப்பிள்ளைபோல இருக்கு!... என்னுடைய காதில் 'புதுப்பிள்ளை' என்ற சொல்கேட்டபோது என்ரை நினைவு திசை திரும்பியது.

நான் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தனிப் பிள்ளை, செல்லப்பிள்ளை. அப்பாவுக்கு என்ன வேலை எண்டு எனக்குத் தெரியாது. காலையிலை ஒரு பையை எடுத்துக்கொண்டு சைக்கிளில் புறப்படுவார். எனக்கு அவர் போகும்போது நித்திரை கலையாது. எண்டாலும் அவர் அம்மாவிட்டைச் சொல்லுறது தெளிவாகக் கேட்கும். இண்டைக்கு எப்ப வருவனோ தெரி யாது. எனக்குச் சாப்பாடு வைக்கவேண்டாம். அம்மா திருப்பிக் கேட்பாள் - இண்டைக்கு எந்தப் பக்கம் போறியள்! அதையெண்டாலும் சொல்லுங்கோவன். எடி விசரி எனக்கே எந்தப் பக்கம் போறதெண்டு தெரியாது! நான் வருவன்! நீ பிள்ளையைக் கவனமாகப் பார்த்துக்கொள். அப்பா சொன்னது எனக்குச் சிரிப்பு வந்தது. ரோட்டிலை சைக்கிள் மணிச்சத்தம் கேட்டது. அப்பா - அம்மாட்டைக் காதுக்கை என்னவோ சொல்லிப் போட்டு சைக்கிளில் ஏறினார். அம்மா தண்ணிப் போத்திலையும், சாப்பாட்டுப் பார்சலையும் சைக்கிள் முன்பக்கத்துக் கூடையில் வைத்தாள். அப்பா அவளைப் பார்த்து அழகாகச் சிரித்தார். அப்ப நல்ல வடிவாயிருந்தார். நான் அவரை மனத்தில் படம் பிடிச்சு வைச்சன். அண்டைக்குப்போன அப்பா இன்னும் திரும்பி வரவில்லை. அவரோடை போன மாமாக்களும் வரவில்லை. 'காணாமல் போயிட்டினமாம்' இப்பிடித்தான் எல்லோரும் சொல்லுகினம். அப்பாவோடை போன செல்லக்குட்டி மாமாவின்ரை மாமிதான் பாவம். அவவுக்குப் 18 வயதுதானாம். மாமாவோடை ஓடிவந்தவ எண்டு எல்லாரும் ஒதுக்கிவைச்சிட்டினம். இது எனக்கு விளங்கவேயில்லை. என்ன ஓட்டப் போட்டியோ! மாமி தாலியும் கட்டவில்லையாம். அவவுக்கு நல்ல நீளத்தலைமுடி. பின்னிவிட்டு முன்பக்கம் எடுத்துப்போட்டால் முழங்காலைத் தொடும். நான் அடிக்கடி தொட்டுப் பார்ப்பேன். நீளமான பாம்புபோல அவளுடைய முதுகில் அந்தப் பின்னல் கிடக்கும். நானும் முடியை வளர்த்து மாமியைப்போலப் பின்னி மார்பில் போட்டுக்கொண்டு ஒரு நடை நடந்து காட்ட வேண்டும். வாழைச்சருகை எடுத்து முறுக்கிப் பின்னல்போலச் செய்தேன். அடியில் ஒரு கல்லைக் கட்டினேன். கஷ்டப்பட்டு அதை என்னுடைய பிடரியில் கட்டிவிட்டேன். வாழைப்பின்னலை எடுத்து மார்பில் போட்டுக்கொண்டு, ஒய்யாரமாக மாமியின் உயரத்தை நினைச்சுக் கொண்டு நுனிக்காலில் எழும்பி நடந்தேன். நல்ல வடிவாயிருக்கடி! மாமியின் குரல்! நான் படக்கெண்டு திரும்ப - என்னுடைய பின்னலில் கட்டியிருந்த கல்லுப்போய் மாமியின் வயிற்றில் பட்டென்று விழுந்தது. மாமி வயிற்றைப் பிடிச்சுக்கொண்டு கீழே இருந்துவிட்டாள்.

அம்மா ஓடி வந்தாள். பதறியபடி மாமியின் கையைப் பிடிச்சுக் கூட்டிக்கொண்டு போனாள். நானும் குற்றவாளியைப்போல என்ரை பின்னலைக் கழற்றி எறிந்துவிட்டுப் பின்னாலை போனன். மாமி வயிற்றைப் பிடித்துக்கொண்டு அழுதாள். சின்னக் கல்லுப்பட்டு இப்பிடித் துடிககிறவதைப் பார்த்தேன். 'அக்கா! என்னாலை ஏலாமக்கிடக்கு! ஐயோ என்ரை அம்மா! மாமி சத்தம்போட்டு அழுதாள். எனக்கு முழுசாட்டமாக இருந்தது. அம்மா ஓடிப்போய் வேலியிலை கிடந்த முருங்கை மரத்துப்பூவை உருவிக் கொண்டு வந்து கொஞ்சம் வெந்தயத் தையும் போட்டு, தண்ணிவிட்டு அடுப்பில் வைத்து மளமளவெண்டு நெருப்பு மூட்டி எரித்தாள். மாமி கத்தினாள் - எனக்கு ஒரு யோசினை வந்தது. வேகமாக ஓடினேன்! அம்மா! எங்கையடி போறாய்! எண்டு கேட்டது என் காதில் விழாதது போலக் காற்றாய்ப் பறந்தேன். சந்தி முடக்கிலை இருந்த வீட்டுக் கேற்றுத் தகரத்திலை படபடவெண்டு தட்டினன். 'பெரியக்கா நிக்கவேணும் பிள்ளையாரப்பா!' மனதுக்கை கும்பிட்டன். நல்லவேளை அக்காதான் வந்தா. அக்கா நான் செங்கமலம் மாமிக்கு கல்லால் அடிச்சுப்போட்டன். அவவுக்கு பெலமாப் பட்டுப் போச்சு... எனக்கு அழுகைவரப் பார்த்து அடங்கிக் கொண்டு, அக்காவின்ரை கையைப்பிடிச்சு இழுத்தன். அக்கா ஒருக்கா அங்கையும் இங்கையும் திரும்பிப் பார்த்தா. உடனை சொன்னா - 'அம்மா பின்வளவுக்கை போலை கிடக்கு, வாடி போவம்' சைக்கிளில் என்னையும் ஏத்திக் கொண்டு தன்ரை பையையும் கொளுவிக் கொண்டு வேகமாகச் சைக்கிளை மிதிச்சாள். 'நானும் இப்படிச் சைக்கிள் ஓடவேணும்' என்ரை மனதிலை ஆசை வந்தது. முன்னாலை பிடிச்சுக்கொண்டிருந்த கைப்பிடியை நான் இறுக்கி அம்த்தினன் அக்கா சொன்னாள். 'பிறேக்கை அமத்தாதை விழுந்திடுவம், சொல்லிமுடிய எங்கடை வீடு வந்திட்டுது. அக்கா சைக்கிளையோ என்னையோ கவனிக்காமல் ஓடிப்போனாள். எனக்கு இந்த அவதியுக்கையும் ஒரு எண்ணம் பளிச்சிட்டுது. 'செங்கமலம் மாமியும் இப்படித்தான் மாமாவோடை ஓடி வந்தாவோ!... சீ! இப்ப அதைப் பற்றி ஏன் நினைப்பான்.

வீட்டுக்கை செங்கமலம் மாமியின் சத்தம் பெரிசாக்கேட்டது. அக்காவும் அம்மாவும் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தனர். கதவைத் தட்டினன். உள்ளை பூட்டிக்கிடந்தது. அம்மா! எண்டு கூப்பிட்டன். அதுக்கிடையில் மாமியின் அலறல் என்ரை குரலை அமுக்க.... ஒரு புதுக் குரல்.... தேன்போல கேட்டது. விடாமல் கேடடது.... கொஞ்ச நேரங்கழிய அம்மா கதவைத் திறந்து கொண்டு வந்தான். நான் எட்டிப்பார்த்தன். உள்ளேயிருந்து அக்கா கூப்பிட்டாள். வாடி! வந்து 'புதுப்பிள்ளையைப் பாரடி! நீ கல்லடிச் சதாலை ஒரு கிழமை முந்திப் பிறந்திட்டானடி! நான் மெல்லப்போய் மாமிக்குப் பக்கத்திலை பூனைக்குட்டிபோலக் கிடந்த புதுப்பிள்ளையைப் பார்த்தன். கண் திறந்து அது என்னை ஒருக்காப்பாத்தது. எனக்கு நல்ல சந்தோஷம். மாமியின் முகம் பூப்போல மலர்ந்து கிடந்தது. அக்கா என்ரை முதுகிலை தட்டிச்சொன்னாள். சரியான நேரத்திலை சரியான வேலை செய்தாய்! கெட்டிக்காரி! அம்மா என்னைப் பாராட்டுப்பார்வை பார்த்தாள். எனக்கு நான் செய்த வேலை ..... நல்லவேலை போலகிடக்கு. எல்லாம் பிள்ளையாரப்பாவின்ரை வேலைதான் எண்டு எனக்கு நல்லாத் தெரியும். என்ரை மூளை வேலை செய்ய அவர்தானே துணை. நினைத்துக்கொண்டு நிற்க - அந்தக் கறுப்பு முகம்! ஒருக்கா அதை முழுசிப்பார்த்தன். அம்மா! முகத்திலை கவலையோடை வாறாள். இதோடை பேசிப்பலனில்லை. மலடன்போலை கிடக்கு!..... அம்மாவின் குரலில் வெறுப்பும் கோபமும் போட்டி போட்டது. வாடி போவம்... கஞ்சியோ! கூழோ குடுத்து, அவனையும் நான் வளர்க்கப்போறன். நடந்துகொண்டே அம்மா முடிவெடுத்தாள். செங்கமலம் மாமி போன மாதம் 2 நாள் காய்ச்சலிலே செத்துப் போனா. மாமாவும் அப்பாவும் இன்னும் திரும்பி வரவில்லை... அம்மா தம்பியை இல்லத்தில விடவேண்டாம் நாங்கள் வளர்ப்பம். அம்மா...

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# சைவ உணவுப் பிரியர்களுக்கு ஏன் கொலஸ்ரோல்

கொழுப்பும் கொலஸ்ரோலும் ஒன்று என்றுதான் பலரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். கொழுப்பு வேறு கொலஸ்ரோல் வேறு. உணவிலிருந்து கிடைப்பது கொழுப்பு. அந்தக் கொழுப்பிலிருந்து கல்லீரல் தயாரிப்பது கொலஸ்ரோல்தான். இரத்தத்தில் கொலஸ்ரோலின் ...ளவு 200 மில்லிகிராம் வீதம்தான் இருக்கவேண்டும்.

கொலஸ்ரோலில் நல்லதும் உண்டு, கெட்டதும் உண்டு. மிகுந்த அடர்த்திக் கொழுப்புப் புரதம் என்பது - நல்ல கொலஸ்ரோல். இது இரத்த நாளங்களில் படிந்துள்ள கொலஸ்ரோலை அகற்றி, கல்லீரலில் சேர்க்கிறது. இதனால் இரத்த நாளம் சுத்தப்படும். இதன் அளவு 35 மில்லிகிராம் வீதத்திற்கு அதிகமாக இருந்தால், மாரடைப்பு தவிர்க்கப்படும். குறையடர்த்திக் கொழுப்புப் புரதம் என்பது - கெட்ட கொலஸ்ரோல். இது கல்லீரலில் இருந்து கொலஸ்ரோலை எடுத்து, இரத்த நாளங்களில் குவிக்கும். இதனால், இரத்த நாளத்தை அடைத்துக்கொள்கின்றது. இதன் அளவு 130மி.கி. வீதத்திற்கு குறைவாக இருக்கவேண்டியது அவசியம் இல்லையென்றால், மாரடைப்பு நிச்சயம் உண்டாகும். அளவோடு இருந்தால், கொலஸ்ரோல் எமக்கு நன்மை. அளவுக்கு மிஞ்சினால், அது ஆபத்தைத் தரும் எதிரி.

இரத்தக் கொலஸ்ரோல் அதிகரிப்பதற்கு - கொழுப்பு மிகுந்த உணவுகள் மட்டுமே காரணமல்ல. பரம்பரைத் தன்மை, உடற்பருமன், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், மனஅழுத்தம், தைரொயிட் கோளாறு ஆகியவற்றாலும் கொலஸ்ரோல் மிகும். புகை பிடிப்பது, மது அருந்துவது, இயக்க ஊக்கி மருந்துகள், கருத்தடை மாத்திரைகள் போன்றவற்றின் வழியாகவும் கொலஸ்ரோல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இது இரத்தத்தில் அதிகரிக்கும்போது, தண்ணீர்க்குழாயில் பாசி சேருவதுபோல இரத்த நாளங்களில் அது படிகிறது. இதனால், இரத்த நாளம் குறுகலாகி, இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. இருதயத்தில் இவ்வாறு நிகழும்போது, இதயத் திசுக்களுக்கு தேவையான இரத்தம் கிடைப்பது குறைகிறது. இதனால், மாரடைப்பு வருகிறது. இதேபோல் மூளையின் இரத்தநாளங்களில் கொலஸ்ரோலின் அளவு சரியாக இருக்கவேண்டும். அதற்கு நம் உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளவேண்டும்.

நாம் என்ன உணவை உண்கிறோம் என்பதைவிட, எவ்வளவு உண்கிறோம் என்பதுதான் முக்கியம். உணவின் அளவு அதிகரித்தால் சக்தியின் அளவு 'கலோரிகள்' அதிகரிக்கும். கலோரிகள் அதிகரித்தால் அது கல்லீரலில் கொழுப்பாக மாறும்.

ஒருவர் கொழுப்புணவை உண்ணவேயில்லை என்றாலும்கூட, அவர் புரதம் மற்றும் மாச்சத்துள்ள உணவுகளை அதிகமாக உண்பாரானால், அவருக்கு கொலஸ்ரோல் அதிகரித்துவிடும். சைவ உணவைச் சாப்பிடுவோருக்கு கொலஸ்ரோல் கூடுவது இப்படித்தான்.

இரத்தத்தில் கொலஸ்ரோல் கூடுதலாக இருப்பதற்கும் ஏற்கனவே கூடுதலாக இருந்தால், அதைக் குறைப்பதற்கும் கீழ்க்காணும் வழிமுறைகள் உதவும்.

ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, பால், முட்டை, தயிர், நெய், வெண்ணெய், சமையல் எண்ணெய்கள், பாலாடை, தேங்காய், முந்திரிப்பருப்பு ஆகியவற்றைத் தவித்து விடுங்கள்.

கொலஸ்ரோலுக்கு மிக நெருங்கிய நண்பன் - உடற்பருமன், உங்கள் வயது, உயரம் ஆகியவற்றுக்கு ஏற்ப உடல் நிறையைப் பேணுதல் அவசியம். ஏற்கனவே சொன்ன உணவுக்கட்டுப்பாடு இதற்கு உதவும். அத்துடன், முறையான உடற்பயிற்சிகளும் தேவை. நடைப்பயிற்சி அல்லது மெல்லோட்டம் நல்ல பலன் தரும். அடுத்து புகைப்பிடித்தலும் மதுப்பழக்கமும் எவ்வளவு கெடுதலோ, அதைவிட பலமடங்கு கெடுதல் அதிகநேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படுகின்றது.

இன்றைய இளம் வயதினர் தொலைக்காட்சிகளை ரசித்துக்கொண்டே, நொறுக்குத் தீனிகளை அதிகமாக உண்கிறார்கள்.

# குழந்தைகளுக்கு உணவூட்டுதல்



**இடையுணவு வகைகள்**

பிரதான உணவூட்டல் நேரங்களுக்கிடையே சத்து நிறைந்த சிற்றுண்டி வகைகள் வழங்குவது சிறப்பானது. தரமான சிற்றுண்டிகள் சக்தியையும் ஊட்டச்சத்துக்களையும் வழங்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

**உதாரணமாக -**

பழுத்த வாழைப்பழம், மாம்பழம் ஏனைய பழவகை, யோகட், சமைக்கப்பட்ட உருளைக் கிழங்கு,


**தவிர்க்கவேண்டிய உணவுகள்**

இனிப்புவகை, காபனேற்றப்பட்ட குளிர் பானங்கள்.

**உணவு சுத்தம்**

எப்போதும் உணவு தயாரிக்கும்போது சுகாதாரம் பேணுவது அசியமாகும். கைகளைச் சவர்க்காரத்தைப் பயன்படுத்தி சுத்தப்படுத்தப்பட்ட பின்பே உணவைக் கையாளவேண்டும். உணவு சமைக்கும் பாத்திரங்கள் எப்போதும் நன்கு கழுவி உலர்த்தப்படவேண்டும். தடிமன் மற்றும் தொற்றுநோய்கள் உள்ளவர்கள் உணவைத்தயாரிப்பது தவிர்க்கப்படவேண்டும். சமைக்கப்பட்ட உணவுகள் நெடுநேரத்தின் பின் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது அவசியமாகும். சமைக்கப்படாத உணவுகள், சமைக்கப்பட்டஉணவுகளுடன் தொடுகையுறுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

பெரும்பாலான பெற்றோர் குழந்தைகளுக்கு உணவூட்டும்போது சிரமப்படுவதும், குழந்தைகள் உணவுண்ண மறுப்பதாகக் கூறுவதும் இயல்பாகும். சில சமயங்களில் குழந் தைகள் உடல் நலக்குறைவு காரணமாக அல்லது மனச்சந்தோஷம் அற்று இருப்பதன் காரணமாக உணவுண்ணுவதைத் தவிர்க்கலாம்.



**சுகதேகியான குழந்தையை உணவுண்ண ஊக்குவித்தல்**

- உணவூட்டும் நேரத்தை சந்தோஷமாகப் பேணுதல்.
- விளையாட்டு மூலம் உணவுண்ணத் தூண்டுதல்.
- அவசரமாக ஊட்டுவதைத் தவிர்த்தல்.
- சிறு சிறு பகுதிகளாக வழங்கல்.
- குழந்தைகள் விரும்பும் வேறுபட்ட வகையான உணவு வகைகளை வழங்கல்.
- குழந்தை தாகமாக உள்ளதா என்பதை அவதானித்தல்.
- குழந்தை பசியாக இருக்கும்போது உணவூட்டல்.
- பலாத்காரமாக உணவூட்டுவதைத் தவிர்த்தல்.
- குழந்தை மகிழ்வற்று இருப்பின் அவர்களில் சிறப்புக்கவனம் செலுத்தி, அவர்கள் மீது அன்பாக இருப்பதை உணரச்செய்தல்.

**நோய்வாய்ப்பட்ட குழந்தையை உணவுண்ண ஊக்குவித்தல்**

- சுத்தமாக பேணுதல்
- இலகுவான உணவுகள் வழங்கல்
- நீராகாரம் வழங்கல்
- அவர்கள் விரும்புகின்ற உணவுகளை வழங்கல் என்பனவாகும்.

எனவே குழந்தைகளுக்கு மகிழ்ச்சியூட்ட கூடியதாகவும், அவர்களுக்கு வேண்டிய ஊட்டச் சத்துக்களை வழங்குவதாகவும் அமைப்பது ஒவ்வொரு பெற்றோரதும் கடமையாகும்.

வி.ஜெயச்சந்திரன்
தகவல் தொடர்பு மையம், விவசாய இரசாயனவியல் துறை
விவசாயபீடம்

# இந்த வார பலன்கள்

## 02.04.2004- 08.04.2004 (திருக்கணிதம்)

| சூ. | புத. ராகு | செவ் சுக் | சனி |
|---|---|---|---|
| யுரே | 03 பி.இ 3.20 கன்-சந்<br>05 பி.இ. 6.14 துல-சந்<br>08 கா 7.50 விரு-சந் | | |
| நெப் | | | சந் குரு |
| | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் முயற்சிகளில் அதிக பிரயாசை இருக்கும். இனத்தவர்களாலும், அயலவர்களாலும் பிரச்சனைகளும் வேதனைகளும் ஏற்படும். தேகாரோக்கியத்தைப் பேண வேண்டும். வரவிலும் பார்க்க செலவுகள் கூடுதலாக இருக்கும். கடன் தொல்லைகளும் தலைதூக்க இடமுண்டு. திருமணப் பேச்சுக்கள் காலதாமதத்தை உண்டுபண்ணும். புதிதாக உத்தியோகத்தைத் தேடுபவர்களுக்கு கருமம் கைகூடுவது கடினம். உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தலங்களில் பிரச்சனைகள் உருவாகும். உயரதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகாமல் நடந்துகொள்வது நன்று. பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரிகளுக்கு மந்த நிலையே காட்டுகிறது. முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாக இருக்கும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இடபத்தில் ஜனனமானவர்களுக்கு தொழில் முயற்சிகள் பலிதமாகும். பணவருவாய் நன்றாக இருக்கும். குடும்பஸ்தர்களுக்கு இல்லறவாழ்வில் மன அமைதி நிலவும். சகோதரர்களாலும், புத்திரர்களாலும் மன மகிழ்ச்சி உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் யாவும் வெற்றியாகவே முடியும். தேகசுகம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமண நிகழ்வுகள் விரைவில் கைகூடி நல்வாழ்வு கிடைக்கும். உத்தியோகத்தில்லுள்ளோருக்கு செல்வாக்கு அதிகரிக்கும். சொந்தத் தொழில் செய்வோர் நற்பலன் காண்பர். வியாபாரிகளுக்கு இலாபம் அதிகரிக்கும். புதிய முதலீடுகளுக்கும் நன்று. மாணவர்களுக்கு முன்னேற்றமுண்டு.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*

மிதுன ராசிகாரர்களுக்கு தொழில் சிறப்பாக அமையும். பிரயாசை கூடுதலாக இருப்பினும், அதற்கேற்ப வருவாய் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொடங்கிய கருமங்கள் இலகுவில் நிறைவுபெறும். தேவைக்கேற்ப பொருளாதாரம் கிடைக்கும். கணவன் மனைவியிடையே அன்பும் ஆதரவும் பெருகும். குடும்பப் பெண்கள் திருப்தியுடன் காணப்படுவார்கள். விவாக முயற்சிகள் விரைவில் கைகூடும். தனிப்பட்ட தொழிலில் ஈடுபடவுள்ளவர்களுக்கு சிறப்பும், முன்னேற்றமும் உண்டு. பொதுமக்கள் சேவையில் ஈடுபட்டுள்ளோர் தமது செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வர். வியாபாரத் தொழில் வளர்ச்சியடையும். அலங்காரப் பொருட்கள் அதிகம் விற்பனையாகும். மாணவர்களுக்கு செல்வாக்குப் பெருகும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

கடகராசியினருக்கு இவ்வாரம் மனக்கஷ்டங்கள், அமைதிக் குறைவு என்பன காட்டும். தொழில் துறையில் பிரயாசை அதிகமாகும். குடும்பத்தில் தொல்லைகள், மனக் கசப்புகள் தோன்றும். துன்ப நிகழ்வுகள் கேள்விப்படலாம். தேகாரோக்கியம் இடையிடையே பாதிப்படையக்கூடும். வைத்தியச் செலவுகளும் அதிகரிக்கும் பெண்கள் குடும்பப் பணிகளை மேற்கொள்வதில் சிரமப்படுவர். விவாகம் சம்பந்தமான பேச்சுக்கள் மேலும் தொடரும். இடமாற்றங்கள் கஷ்டத்தைக் கொடுக்கும். வியாபாரிகள் முதலீடுகளை விற்பனை செய்வதில் சிரமம் காண்பர். இலாபம் குறைவாக இருக்கும். மாணவர்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் துறையில் பிரயாசை அதிகமாகும். குடும்பத்தில் அமைதிக் குறைவும், உறவினர்களிடையே அபிப்பிராய பேதங்களும் ஏற்படும். பணச்செலவு வழமையிலும் பார்க்க அதிகமாகும். வெளிநாட்டிலிருந்து நற்செய்திகள் கிட்டும். குடும்பப் பெண்கள் தமது பணிகளைச் செய்வனே செய்வதில் பிரயாசை காட்டுவர். திருமண நிகழ்வுகள் கைகூடுவது கடினம். வெளிநாட்டுப் பிரயாணங்கள் கைகூட வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்கள் வேலைத்தலங்களில் நிம்மதி குறைந்து காணப்படுவர். கூடுதலான பொறுப்புக்களைச் சுமக்கவேண்டியிருக்கும் வியாபாரிகளுக்கு நட்டத்தையே காட்டுகிறது. மாணவர்களுக்கு கூடிய முயற்சி தேவை.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னி ராசிகாரர்களுக்கு தொழில் பிரயாசை கூடுதலாக இருக்கும். செலவுகளுக்கும் குறைவில்லை. குடும்பத்தில் வீண் சச்சரவுகள், வாக்குவாதங்கள் ஏற்படும். கருத்து வேறுபாடுகள் தவிர்க்க முடியாமலிருக்கும். எடுத்த காரியங்களில் தடை தாமதங்கள் காட்டும். பணவருவாய் இருப்பினும் செலவுகளைச் சமாளிக்க முடியாது. தேக சுகமும் இடையிடையே பாதிக்கப்படலாம். குடும்பப் பெண்கள் விரக்தியடைந்து காணப்படுவர். திருமண முயற்சிகள் இழுபறி நிலையிலேயே இருக்கும். உத்தியோகப் பெண்கள் தமது பொறுப்புக்களைச் சமாளிப்பதில் கஷ்டமுறுவர். வியாபாரத்துறை வளர்ச்சி குன்றிக் காணப்படும். கூட்டுறவு வியாபாரங்களில் பிரச்சினைகள் தோன்றும் . மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே காணப்படும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*

துலாராசியினருக்கு குரு லாபஸ் தானத்தில் சஞ்சரிப்பதால் பல நற்பலன்கள் காட்டும். இல்லறம் நல்லறமாக விளங்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் நல்லுறவும் நிலவும். தொழில்மூலம் வருவாய் அதிகரிக்கும். தேகசுகம் பெரிதாகப் பாதிக்கப்படமாட்டாது. உறவினரின் வருகையால் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு வெளிநாட்டிலிருந்து பணவருவாய் கிட்டும். திருமண நிகழ்வுகள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்கள் வசதியான இடமாற்றங்களைப் பெறுவார்கள். சிலருக்கு சம்பள உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பணம் சேரும் புதிய முதலீடுகளுக்கு நன்று. மாணவர்கள் உயர் கல்வி பயிலும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிக ராசியினருக்கு அட்டமத்துச் சனியும், பத்தில் வியாழனும் நடந்துகொண்டிருப்பதால் நற்பலன்கள் குறைவு. தொழில் துறையில் சிரமம் கூடுதலாக இருக்கும். குடும்பத்தில் களத்திரசுகம், புத்திர சுகம் திருப்தியாக இல்லை. பல பிரச்சினைகள் மாறிமாறி வந்துகொண்டிருக்கும் அவற்றைச் சமாளிப் பதில் சிரமம் தோன்றும். வருவாயைக் கொண்டு செலவுகளைச் சமாளிப்பதும் கஷ்டம். திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் காலவரையறையின்றித் தள்ளிப்போகும். வேலைபார்ப்பவர்களுக்கு சோதனைகள் கூடுதலாக இருக்கும். இடமாற்றங்களும் ஏற்படட இடமுண்டு. வர்த்தகர்களுக்கு முன்னேற்றம் எதுவும் தென்படவில்லை. கடன்கள் கொடுத்தால் அதனை அறவிடுவது மிகக்கஷ்டம். புதிதாக எதையும் ஆரம்பிக்கவேண்டாம். மாணவர்களுக்கு எதிலும் முன்னேற்றம் காணவில்லை.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனுசு இராசியினருக்கு குடும்ப நிலை நன்றாக இருக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே நல்லிணக்கமும், புரிந்துணர்வும் தென்படும். புத்திரர்களால் பெருமை சேரும். தொழில் சிறப்பாக நடக்கும். பணவருவாய் தேவைக்கேற்ப திருப்தியாகக் கிடைக்கும். தேக சுகம் பாதிப்படையாது. உற்சாகத்துடன் தொழிலாற்றக் கூடியதாக இருக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். உத்தியோகத்தர்களுக்கு பணியாற்றுவதில் நன்மதிப்பும் பாராட்டுக்களும் கிட்டும். திருமண முயற்சிகள் கைகூடும். சிலருக்கு புதிதாக தொழில்வாய்ப்பு கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். ஏற்றுமதி இறக்குமதி செய்வோர் நல்ல லாபமடைவர். மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பான முன்னேற்றம் காணப்படுகிறது.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகரராசியில் பிறந்தவர்களுக்கு அட்டமத்து வியாழன் நிகழ்வதால், இல்லறத்தில் அமைதிக் குறைவாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவும், பிரச்சனைகளும் தோன்ற இடமுண்டு. தொழில் முயற்சியால் அலைச்சல், பிரயாசை அதிகமாகும். பணவுருவாய் குறைவாக இருப்பதால் குடும்பத்தேவை களைப் பூர்த்தி செய்ய முடியாமல்இருக்கும். தேகத்தில் உஷ்ண சம்பந்தமான வியாதிகள் தோன்றலாம். விவாக முயற்சிகள் தாமதமடையும். உத்தியோகத்திலுள்ளவர்கள் மறைமுக எதிர்ப்புக்கள் பற்றி அவதானமாக இருக்கவும். வியாபார முதலீடுகளைப் பொறுத்துச் செய்வது நன்று. வெளியிடங்களிலிருந்து உதவிகள் கிடைக்கலாம். மாணவர்கள் விளையாட்டுத்துறையில் அதிக ஊக்கம் காட்டுவர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*

கும்பராசியினருக்கு தொழில் சிறப்படையும். முயற்சிக்கேற்ப லாபம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்களுடன் நல்லுறவு தென்படும். எடுக்கும் கருமங்கள் விரைவில் அனுகூலமாகும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் நற்பலனளிக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடைபெற இடமுண்டு. புதிதாக உத்தியோகத்தை நாடுபவர்களுக்கு நற்பலன் செல்வாக்கும், உயர்ச்சியும் உண்டு. சிலருக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வியாபாரம் நற்பலனளிக்கும். பொருள்சேரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவர். உயர் கல்வி கிட்டும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

மீன ராசியில் பிறந்தவர்களுக்கு பல வகையிலும் பிரச்சனைகள் தோன்றி மறையும். தொழில் துறையில் அலைச்சல், பிரயாசை காட்டும். குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவு, சச்சரவுகள் இருக்கும். செலவுகளும் அதிகரித்துக் காணும். எல்லாவற்றிலும் நிதானமாகச் செயற்படவேண்டும். அவசரப்பட்டு செலவுகளைக் குறைக்க வேண்டும். குடும்பப் பெண்களுக்கு வேலைப்பளு, பொறுப்புணர்வு அதிகமாகக் காட்டும். திருமண முயற்சிகள் கைகூடுவதில், தாமதம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்களும், வேலைப்பளுவும் அதிகமாகும். சக தொழிலாளர்களின் ஒத்துழைப்பு கிடைப்பது கடினம். வியாபாரிகளுக்கு லாபம் குறைவாகவே இருக்கும். கொடுக்கல்வாங்கல்களில் அவதானந் தேவை. மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே காணப்படும்.

---

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XXXVIII - சிவா சின்னப்பொடி

# ஆளுமையைச் சிதைக்கின்ற கருத்துத்திணிப்பு முறை

நாங்கள் நினைச்சம் நீங்கள் தமிழ் பெற்றோராக்கும் என்று. நாங்கள் சொல்லுறது உங்களுக்குப் புரியவேணும்' என்று அந்த ஆசிரியர் விளக்கம் கொடுத்தார்.

சுடுதண்ணி போல் கொதித்துக்கொண்டிருந்த அந்தக் கனவானை அடக்கிய அவரது மனைவி - தங்கள் குழந்தைக்கு என்ன பிரச்சினை என்றுகேட்டார்.

'உங்கள் குழந்தை அதனுடைய வயதுடைய சராசரிக் குழந்தைகளுக்கு இருக்கக் கூடிய இயல்பான மனநிலையில் இல்லை. இந்த வயதில் அதற்கு நல்ல கருத்துக்களைச் சொல்லிக்கொடுக்கவேண்டும் என்று அந்தக் குழந்தையைப் பரிசோதித்த மனநல மருத்துவர் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்.

'என்னுடைய பிள்ளைக்கு என்ன? அது நல்லாத்தான் இருக்குது. அதை எப்படி வளர்க்க வேண்டும் என்பது குழந்தையின் அப்பாவான எனக்குத் தெரியும். நீங்கள் பாடத்தை மட்டும் சொல்லிக்கொடுங்கோ. வேறொன்றிலையும் தலையிடவேண்டாம்' என்று அந்தக் குழந்தையின் தந்தை கத்தினார்.

இது சொல்லிக் கேட்கிற கேஸ் இல்லை என்பதைப் புரிந்துகொண்ட அந்த ஆசிரியர்- அன்றைய சந்திப்புப் பற்றியும், அந்தக் குழந்தையின் எதிர்காலம் பற்றியும் பாடசாலை நிர்வாகத்துக்கு ஒரு அறிக்கை கொடுத்தார்.

பாடசாலை நிர்வாகம் அந்த அறிக்கையை 'அலைக்கேசியோன் பமிலியால்' எனப்படும் குடும்ப நலன்காக்கும் பிரிவுக்கு அனுப்பி வைத்தது.

குழந்தைகளின் கல்வி மற்றும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்குப் பொறுப்பான அந்த அமைப்பின் அதிகாரிகள்- அந்த தம்பதியரின் வீட்டுக்கு திடீரென்று சென்று சோதனை நடத்தினர். அந்த வீட்டின் சூழ்நிலை - அங்கே குழந்தைகளுக்கு செய்து கொடுக்கப்பட்டிருக்கும் வசதிகள், குடும்ப வருமானம் மற்றும் பிள்ளைகளுடன் பெற்றோர் செலவிடும் நேரம் என்று, பல்வேறு கோணங்களில் அவர்கள் விசாரணை நடத்தினர்.

பாடசாலை நிர்வாகம் குறிப்பிட்ட அந்தக் குழந்தையையும் அவர்கள் தங்களது உளநல மருத்துவர்கள்மூலம் சோதனைக்கு உட்படுத்தினர். இந்தச் சோதனை நடந்தபோது, குழந்தையின் உடலில் தடியால் அடித்ததற்கான தழும்புகளையும், தீக்காயங்களையும் அவர்கள் கண்டுபிடித்தனர்.

பாடசாலை நிர்வாகத்தின் அறிக்கை மற்றும் குடும்பநலன்காக்கும் பிரிவின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் - குழந்தையை உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் துன்புறுத்தியதாக அந்தப் பெற்றோர் மீது, பாரிஸ் நகரக் காவல்துறையினரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின் போது- குழந்யை அடித்து வளர்ப்பது தமிழ் கலாசாரம் என்றும், தங்கள் குழந்தையைத் தீயால் சுட்டது பொய் என்றும், அந்த தம்பதியினர் தெரிவித்தனர்.

குழந்தையின் மனதில் மனிதர்கள் தொடர்பான ஏற்றத்தாழ்வான கருத்தை திணித்தது ஏன் என்று நீதிவான் கேட்டபோது- உலகத்தில் மனிதர்கள் ஒருபோதும் சமத்துவமாக இருக்கமுடியாது என்றும், ஒருவர் உயர்ந்தவராகப் பிறப்பது முந்திய பிறப்பில் செய்த புண்ணியத்தால் வருவது என்பது - தமிழ் மக்களது நம்பிக்கை என்றும் பெற்றோர் கூறினார்.

இறுதியில் - இந்தப் பெற்றோரிடம் மிக மோசமான அடிப்படைவாதக் கருத்துக்கள் இருப்பதாகவும், இவர்களால் குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்க்கமுடியாது என்றும், அதனால் அவர்களின் குழந்தைகளையும் அரசாங்கம் பொறுப்பெடுத்து வளர்க்கவேண்டும் என்றும், வாரத்தில் சனி, ஞாயிறு நாட்களில் பெற்றோர் குழந்தைகளைச் சென்று பார்க்கலாம் என்றும், நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பால் ஆடிப்போன அந்தப் பெற்றோர்- இதற்கு எதிராக மேல்முறையீடு செய்த போதிலும், அங்கும் இதே தீர்ப்பே உறுதிப்படுத்தப் பட்டது. கடைசியாக அவர்களது வழக்கறிஞர் ஒரு ஆலோசனையை வழங்கினார்.

அதாவது - அவர்கள் தங்கள் தாய்நாட்டுக்கு அதாவது தாயகத்துக்கு திரும்பிச் செல்லப்போவதாக எழுதிக்கொடுத்தால், இந்தத் தீர்ப்பு அவர்களை பாதிக்காது என்றும், அவர்கள் குழந்தைகளுடன் தாயகம் திரும்பலாம் என்பதே அந்த ஆலோசனையாகும்.

இதன்படி 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அந்தத் தம்பதியினர் பிரான்ஸ் உள்நாட்டு அமைச்சுக்கு எழுதிக்கொடுத்துவிட்டு தாயகம் திரும்பியதாக இவர்களது சம்பவத்தில் பாடசாலையில் மொழிபெயர்ப்பாளராகச் சென்ற எனது நண்பர் தெரிவித்தார்.

1990 இக்கும் 1995 இக்கும் இடைப்பட்ட காலத்தில் பாரிஸ் நகரத்தில் கல்வி கற்ற வேற்றின மொழி அடையாளத்தைக் கொண்ட குழந்தைகள் தொடர்பான ஒரு ஆய்வை, குழந்தைகள் நலன்காக்கும் பணியகம் மேற்கொண்டது.

ஆபிரிக்கர்கள், அரேபியர்கள், சீன, வியட்நாமியர்கள், தமிழர்கள், கிழக்கு ஐரோப்பியர்கள் என்று பல்வேறு சமூகங்களையும் சேர்ந்த குழந்தைகள் மத்தியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பிரெஞ்சு சமூகத்தில் இந்தக் குழந்தைகளின் இருப்பு எவ்வாறு இருக்கிறது என்பதை மதிப்பீடு செய்வதே இதன் நோக்கமாக இருந்தது.

இந்த ஆய்வின் முடிவுகளின்படி தமிழ் குழந்தைகள் படிப்பில் கெட்டிக்காரர்களாகவும், கிரகிக்கும் திறன் மிக்கவர்களாகவும் இருந்த போதிலும், கூட்டுச்செயற்பாடு இல்லாமை, ஆளுமை இல்லாமை, தலைமைத்துவப் பண்பு இல்லாமை ஆகிய மூன்று குறைபாடுகள் அவர்களிடம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டுச் செயற்பாடு இல்லாமைக்கு - மற்றக் குழந்தைகளைச் சமத்துவமற்றவர்களாக (சாதி) பார்க்கும்போக்கும், தற்பெருமையடிக்கும் அல்லது பொறாமைப்படும் போக்கும், தமிழ் குழந்தைகளிடம் இருப்பது பிரதான காரணம் என்றும், இந்தப் போக்குகள் பெற்றோர்களாலேயே குழந்தைகளுக்கு திணிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.



ஆளுமை இல்லாமைக்கு - பிள்ளைகள் தேடல் இல்லாதவர்களாக, கருத்தை இரவல் வாங்குபவர்களாக அதாவது, கேள்விக்கான விடைகளை மனப்பாடம் செய்பவர்களாகவே இருப்பதும் முக்கிய காரணம் என்றும், பாடசாலை வேலைத்திட்டத்திற்கு அல்லது பாடத்திட்டத்துக்குப் புறம்பாகப் பரீட்சைக்காகப் பிள்ளையை படிக்கும்படி நிர்ப்பந்திப்பது, அவர்களது ஆளுமையை குறைக்கச் செய்கிறது என்றும் குறிப்பிடப்பட்டது. அத்துடன், எந்த விடயத்தையும் முதலில் எதிர்மறையாக ஆரம்பித்து பிள்ளைகளை மனதில் பயத்தை உண்டாக்குவதும், அதாவது நெருப்பு என்பது மனித வாழ்வில் எவ்வளவு முக்கியமானது, அதனால் எவ்வளவு பயன் உள்ளது என்று பிள்ளைக்கு சொல்லிக்கொடுத்துவிட்டு, கடைசியில் அது சுடவும் செய்யும் அதனால் ஆபத்தும் இருக்கின்றது என்பதை சொல்லாமல் முதலிலேயே நெருப்பை தொட்டால் சுட்டுவிடும் என்ற பயத்தை உண்டாக்கிவிடும் கருத்து திணிப்பு முறையும் பிள்ளைகளின் ஆளுமையை சிதைக்கின்றது எனவும் குறிப்பிடப்பட்டது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அறிவுஉடையார் ஆவது அறிவார் அறிவுஇலார்*
*அஃதுஅறி கல்லா தவர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## இன்றைய தேர்தலும்... நாளைய இலங்கையும்...

இன்று பொதுத்தேர்தல் நாள்.

இலங்கை மக்கள் சுதந்திரமடைந்த பின்னர் சந்திக்கும் 13 ஆவது பொதுத்தேர்தல் இதுவாகும். அது மட்டுமல்ல. மூன்றாண்டுகளுக்குள் எதிர்கொள்ளும் இரண்டாவது நாடாளுமன்றத் தேர்தலாகவும் இது உள்ளது.

225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் 196 உறுப்பினர்கள் மக்களின் வாக்குகளின் மூலமும் 29 உறுப்பினர்கள் தேசியப் பட்டியல்களில் இருந்தும் தெரிவுசெய்யப்படுவார்கள் என்பது தெரிந்தவிடயமே.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை புரிந்துகொள்வதற்கு சிக்கலானது. எனினும், இம்முறை வேறுபல நாடுகளிலும் நடைமுறையிலிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்லின மக்கள் வாழும் இலங்கை போன்ற நாடுகளுக்கு இம்முறை பொருத்தமானதா இல்லையா என்பது குறித்த வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. எனினும் பெரும்பான்மையின மக்களும் சிறுபான்மையின மக்களும் விகிதாசார அடிப்படையில் பெருமளவில் வித்தியாசமாக உள்ள நாடுகளில் இம்முறை பெரும்பான்மையினத்தவர்களுக்கு சாதகமானதாகவே அமைந்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

எதுவானாலும், இலங்கையில் இம்முறை கடந்த இரு தசாப்தங்களில் நடைபெற்ற தேர்தல்களிலும் பார்க்க வித்தியாசமான சூழலில் - அதாவது யுத்த நெருக்கடியற்ற சமாதான சூழலில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னெப்போதுமில்லாதவாறு விடுதலைப் புலிகளும் அனுகூலமாக செயற்பட முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இதன் காரணமாக வடக்கு - கிழக்கு மக்கள் இம்முறை கணிசமான அளவில் தமது வாக்குகளை பதிவுசெய்யும் உரிமையைப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பத்தை பெறுபவர்களாகியுள்ளனர்.

கடந்த காலங்கள் - போர் காரணமாகவும், அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வு, அகதி வாழ்க்கை மற்றும் அரச அழுத்தங்கள் காரணமாகவும் வடக்கு - கிழக்குப் பகுதி மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை இழந்தவர்களாக இருந்தனர்.

கடந்த தேர்தலிலும்கூட கிழக்குப் பகுதி வாழ் மக்கள் தமது வாக்குகளை பதிவுசெய்யும் உரிமையை படைத்தரப்பினர் மறுத்த பிரச்சினையானது நீதிமன்றம் வரை போய் அடிப்படை மனித உரிமை மீறல் குற்றமாக இனங்காணப்பட்டமையை நினைவிற் கொள்ளவேண்டியதும் அவசியமே.

ஆனால், இம்முறை சூழல் மாறியுள்ள போதிலும் தமிழ் மக்கள் சுயாதீனமாகவும், இயல்பாகவும் வாக்களிப்பதற்கான அழுத்தங்களும், அச்சுறுத்தல்களுமற்ற சூழல் முழுமையாக ஏற்பட்டுவிட்டது என்று கூறமுடியாது. இராணுவப் பிடிக்குள்ளிருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலேயே இராணுவ சோதனைச் சாவடியை அண்டியுள்ள பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கொத்தணி வாக்குச் சாவடிகளில் தமது வாக்குகளை அளிக்கப் போகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனைய பகுதிகளிலுள்ள மக்கள் பதற்றமின்றி சாவகாசமாக தமது வதிவிடங்களுக்கு அருகிலுள்ள வாக்குச் சாவடிகளில் சென்று வாக்களிக்கும் வாய்ப்பினை உடையவர்களாக இருக்க இராணுவ ஆக்கிரமிப்பற்ற பகுதி வாழ் மக்கள் பல கிலோமீற்றர் தூரமும், பல மணி நேரம் பயணம் செய்து வந்து தமது வாக்குகளை அளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இது இலங்கையில் நிலவும் ஜனநாயக சுதந்திரமும், மனித உரிமைகளின் சமத்துவத் தன்மை ஆகியவை குறித்த பல செய்திகளை சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தவே செய்யும்.


இத்தகைய நெருக்கடிகள், அலைச்சல்கள் மற்றும் நடைமுறைப் பிரச்சினைகள் அனைத்தையும் சகித்துக்கொண்டு தமிழ் மக்கள் தமது வாக்குகளை பதிவுசெய்ய முன்வருகிறார்கள் என்றால் - அவர்கள் தமது வாக்குகளின் ஊடாக ஏதோ ஒரு முக்கியமான கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றவும், அதனூடாக உலக சமூகத்துக்கு சில விடயங்களை அழுத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறார்கள் என்பதே அர்த்தமாகும்.

இன்றைய தேர்தலை தென்பகுதி மக்கள் என்ன நோக்குடன் எதிர்கொள்ளப் போகிறார்களோ தெரியவில்லை. ஆனால், அவர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி அதன்மூலம் தெரிவுசெய்யும் அரசாங்கம் இலங்கையில் எதிர்கால அமைதியையும், சமாதானத்தையும் உறுதி செய்வதாக இருக்கவேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பாகும்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு பகுதி தமிழ் மக்கள் தங்களின் எதிர்காலத்தை தமது ஐக்கியப்பட்ட செயற்பாட்டின் மூலம் - உறுதிசெய்ய முடிவெடுத்தவர்களாகவும் அதற்கேற்ப தமது வாக்குகளை தவறாது அளிப்பவர்களாகவும் இருப்பார்கள் என்பதே சர்வதேச சமூகத்தின் கணிப்பு...

நாளைய நாள் இந்த எதிர்பார்ப்புக்களையும், கணிப்புக்களையும் உறுதிசெய்யும் நாளாக விடியவேண்டும்.

## நாடும் நடப்பும்




## கிழக்கின் வன்முறைகளுக்கு சர்வமத குருமார் கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுக்குச் சர்வமத குருமார் கண்டனம் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தின் பலபகுதிகளிலும் கடந்த சில நாட்களாகப் பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட நிலைமையைக் கண்டித்தே சர்வமதத் தலைவர்கள் இந்தக் கண்டனத்தைத் தெரிவித்தனர். அவர்களது கண்டன அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது-

மட்டக்களப்பு பிரதேசத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் நிகழ்வுகள் மிகுந்த அச்சத்தையும், கவலையையும் தருவதோடு, மனித உயிரின் பெறுமதியையும் இல்லாதொழிப்பதாக அமைகிறது.

பரபரப்பான தேர்தல் சூழலுக்கு மத்தியில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், கல்விமான்கள், அரச அதிகாரிகள் ஏனைய அப்பாவிப் பொதுமக்கள் என்று அனைவருக்கும் எதிராக இடம்பெற்றுவரும் மிரட்டல்கள், கொலை முயற்சிகள், படு கொலைகள் போன்றவற்றை எந்த வகையிலும் நியாயப் படுத்த முடியாது.

மனிதப்பண்பற்ற ஜனநாயக விரோதமான இது போன்ற நடவடிக்கைகள் - நிலைமையை இன்னும் மோசமாக்கி, மீண்டும் இந்தப் பிரதேசத்தை ஓர் யுத்த சூழலுக்குத் தள்ளிவிடுமோ என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது.

துப்பாக்கிச் சத்தங்களாலும் மரண ஓலங்களாலும் நாம் சுதந்திரத்தையோ, சமாதானத்தையோ அடையமுடியாது.

மேலும், அனைத்துமதங்களும் அன்பையும், மனிதநேயத்தையும், மன்னிப்பையுமே போதிக்கின்றன.

எனவே, வேற்றுமையிலும் ஒன்றுமை கண்டு, அனைவரும் பாதுகாப்போடும், அச்ச உணர்வின்றியும், சுதந்திரமாகவும் வாழும் உரிமையை உறுதிப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

தேர்தல் வாக்குரிமையைப் பயன்படுத்த தமக்கு யாழ். பல்கலைக்கழகம் விடுமுறை தராததை எதிர்த்து - யாழ். பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

யாழ்.பல்கலைக்கழகத்தில் சுமார் ஆயிரம் வரையிலான வெளிமாவட்ட மாணவர்கள் கல்வி கற்கின்ற போதிலும், அவர்கள் தமது சொந்தப் பிரதேசங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்காக பல்கலைக்கழக நிர்வாகத்தால் எந்தவித ஏற்பாடும் செய்து தரப்படவில்லை.

இதனால், எமது வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. தேர்தலை ஒட்டி மாணவர்கள் தமது சொந்தப் பிரதேசங்களுக்குச் சென்று வாக்களிக்கக்கூடிய வகையில் விடுமுறைகூட வழங்கப்படவில்லை.

அவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டிருந்தால் நாம் எமது பிரதேசங்களுக்குச் சென்று வாக்குரிமையைப் பயன்படுத்தி இருக்க முடியும். இன்றுவரை விரிவுரைகள் இடம்பெற்றுக் கொண்டே இருப்பதால் திட்டமிட்ட ரீதியில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தால் எமது வாக்குரிமை மறுக்கப்பட்டிருக்கிறது எனத் தெரிவித்தே தமது முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட மனித உரிமைகள ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி றுவான் சந்திரசேகராவிடம் கேட்ட போது - தாம் இந்த விடயம் குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்புகொண்டதாகவும், இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே சரியான முடிவெடுக்கவேண்டும். தேர்தல் தொடர்பாக விடுமுறை வழங்கும் அதிகாரம் தமக்கு கிடையாது என யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார். (ப)

## புலிகளின் பகுதி மக்கள் வாக்களிக்க விசேட திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

நாடாளுமன்றப் பொறுத்தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக விசேட திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தயா னந்த திஸநாயக்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாக்களிப்பதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வாக்களிக்கவரும் மக்களுக்கு வழமையான சோதனை நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறமாட்டாது என்றும், வாக்களித்துவிட்டு வீடுகளுக்குத் திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த தேர்தலின்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் வாக்களிக்கும்போது ஏற்பட்ட விபரீதங்கள்போன்று இந்தமுறை எதுவும் நடைபெறமாட்டாது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவி_தார்.

## நாடகம்

இ.விஜேந்திரன்

# காவிய நாயகன் நாடக ஆற்றுகை



**மனிதம் என்னும் ஆலயத்தை**
**மனிதர்கள் ஏன் இடிக்கின்றீர்.**
**புனிதம் பொழியும் திரு விளக்கை**
**புல்லர்கள் ஏன் அணைக்கிறீர்.**
**கற்றூணில் கட்டுண்ட தேகம்**
**கசைவார்கள் சுவை பார்க்கும் வேகம்**
**செந்நீரை சொட்டும் மெய்யாகம்**
**கண்ணீரின் கதையோ இச் சோகம்.**
**எழைகள் துயர் நீக்கினாரே**
**எளியவர் பிணி போக்கினாரே**
**வேளையில் கை தூக்கினாரே**
**வேதத்தை எளி தாக்கினாரே**

இயேசுவை கற்றூணில் கட்டி அடிக்கும் போது பாடப்படும் இப்பாடலானது மிக உருக் கமானது. இக்காட்சியைப் பார்க்கும் ஒவ்வொரு வரையும் சோகத்திற்கு உள்ளாக்கும். இயேசு ஒவ்வொரு கிறீஸ்தவர்களிற்காகவும், தான் அனுபவித்த பாடுகள், மரணம், உயிர்ப்பு என வேதாகமத்தை அடி ஒட்டியதாக திருப்பாடுக ளின் காட்சியாக 'காவியநாயகன்' ஆற்றுகை இடம்பெறுகின்றது.

கலை வழியே இறைபணியை நாடிநிற்கும் திருமறைக்கலாமன்றம் - கல்வாரியின் கதையை ஆண்டுதோறும் அரங்கேற்றி வருகிறது.

சிறுவர் கலைக்கூட மாணவர்கள், நாடகப் பயிலக மாணவர்கள், கவின் கலைகள் பயி லக மாணவர்கள், மூத்த கலைஞர்கள் மன் றத்தின் வெவ்வேறு பிரிவுகளின் பொறுப்பாளர் கள் என ஒரே குடும்பமாக 250 பேரிற்கு மேற பட்டோர் இணைந்து ஆற்றுகை செய்கின்றனர்.

வெவ்வேறு கோணத்திலிருந்து வெவ் வேறு கலைவடிவங்களைப் பயன்படுத்தி இறைமகன் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியைக் கல்வாரியில் கடவுள், அன்பில் மலர்ந்த அமர காவியம், சாவை வென்ற சத்தியன், கவலையின் எல்லை, அமலன் காட்டிய வழி, பலிக்களம், களங்கம், இரு ளுக்குப் பின், கடவுள் வடித்த கண்ணீர், செந்தணல், மலையில் விழுந்த துளிகள், சிலுவை உலா, கல்வாரிப் பரணி, கல்வாரி கலம்பகம், காவியநாயகன் என வெவ்வேறா பெயர்களில் ஆண்டுதோறும் இடம்பெறும் இந்தத தவக்கால ஆற்றுகை - ஐந்து நாள் காட்சி யாக இடம்பெறும். பங்குனி 30,31 திகதியும் சித்திரை 01,03,04 திகதிகளிலும் காவிய நாயகன் ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

கடந்த 40 வருடங்களில் 25 இற்கு மேற் பட்ட திருப்பாடுகளின் காட்சிகளைத் திரு மறைக்கலாமன்ற இயக்குநர் கலாநிதி மரிய சேவியர் அடிகளார் எழுதியுள்ளார். ஐரோப்பா வில் தோன்றிய இந்த நாடகமரபை தமிழு க்குரிய தனித்துவத்துடன் தத்தெடுத்துக் கொண்ட பெருமை இயக்குநரையே சாரும். பாஸ் என்றால் அது சவிரிமுத்து சுவாமியின் பாஸ் என்று கால் நூற்றாண்டிற்கு மேலாக ஈழத்தவர் கூறும்படி செய்தவர். அந்தளவிற்கு இந்தத் திருப்பாடுகளின் காட்சியுடன் இரண்ட றக்கலந்துள்ளார். அவரும் அவரது உரு வாக்கமான திருமறைக்கலாமன்றமும் இந்த நாடக வரலாற்றில் மிகப்பெரும் சக்தி.



காவிய நாயகன் திருப்பாடுகளின் காட்சி இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டது. நவீன ஒலி, ஒளி அமைப்புடன் மிக நீண்ட அமைப்பாகவுள்ள மேடையில் பிலாத்துவின் அரண்மனை மிகப்பிரமாண்டமான முறையில் வடிவமைக்கப்பட்டு இருக்கும். வேதாகமத்தின் படி - இறைமகன் இயேசுவின் புதுமைகள், பாடுகள், மரணம், உயிர்ப்பு இதற்கென மேடையின் ஒவ்வொரு பகுதியிலும் காட்சி அமைப்புக்கள் வடிவமைக்கப்பட்டு மேடை நீண்ட அமைப்பாகக் கம்பீரமாகக் காட்சிய ளிக்கும்.

மனிதம் என்ற தேடலுக்குப் பதில் தரும் வகையில் இறைமகன் இயேசுவின் வாழ்க்கை அமைந்துள்ளது. அந்த திருமகன் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், கட்டத்தையும், சவாலையும், எவ்வாறு அணுகி மனிதத்தின் உச்சமாகவும், எடுத்துக்காட்டவும் விளங்கி னார் இயேசு பிரான் என்பதைக் கூறுவதே காவியநாயகன். கத்தோலிக்கர் மத்தியில் சடங்காகவும் நாடகமாகவும் காணப்படும் திருப்பாடுகளின் காட்சி கிறீஸ்தவர்களைப் புதுப்பிக்கின்றது.

திருப்பாடுகளின் காட்சி ஒரு வகையில் நாடகமாகவே நிகழ்த்தப்படும். ஆனால், அதற்கு ஆழமான சடங்குப் பண்பு காணப்படு கின்றது. கிறீஸ்தவர்கள் தபசுகாலம் அல்லது பாஸ்கா காலம் என அழைக்கப்படும் காலப் பகுதியில் கிறீஸ்து அனுபவித்த பாடுகள், மரணம், உயிர்ப்பை தியானிப்பர். 40 நாட்க ளைக் கொண்டதான இந்தத் தவக்காலத்தில் தம்மை ஒறுத்து, தவமுயற்சிகள் செய்து, ஆடம்பரங்களைத் தவிர்த்து, சிலுவைப் பாதை பவனிகளை மேற்கொண்டு, பாவசங்கீர்த்தனம் எடுத்துத் தம்மை தூய்மைப்படுத்துவர்.

பாவம் செய்த மனிதர்களிற்காக இயேசு துன்புறுத்தப்பட்டார். எனவே, அவரின் துயரங் களை ஆழமாகத் தியானிக்கும்போது, தனது பாவங்களின் மேலான வெறுப்பையும், மனம் திரும்பலையும் மனிதன் பெறமுயல்வான்.

இறைவா நீ இருக்கிறாயா? இறந்துவிட் டதாகவல்லவா சொல்லுகிறார்கள் 'கடவுள் இறந்துவிட்டார் - இப்படிக்கு நீட்சே' இறைவா நீ மனிதனைப் படைத்தாயா? மனிதன் உன் னைப் படைத்தானா?.... எதையோ தேடிக் கொண்டு வரும் மூன்று தெளிவற்றவர்களின் தேடல் வார்த்தைகளுடன் ஆரம்பமாகிறது காவிய நாயகன். மனிதனில் இறைவனையும் இறைவனின் மனிதனையும் தேடும் மனிதர்க ளின் ஆதங்கத்தை இறைவார்த்தைகள் ஊடாக நகர்த்தப்படுகிறது. வேதாகமத்தை உள்ளடக்கியதாக இறைமகன் இயேசுவின் வாழ்க்கை சித்தரிக்கின்றது தவக்கால ஆற் றுகை.

கத்தோலிக்கத் திருச்சபையானது உரு வாகுவதற்கு முன், யூத எபிரேய மதப் பின்ன ணியில் கலைகள் பெரிதும் ஏற்கப்படவில்லை. 'ஏக தெய்வக் கோட்பாடே' இதற்குக் காரணம் எனலாம். கிறீஸ்துவுக்குப் பிற்பட்ட காலத்தில் உடனடியாக மாற்றங்கள் வந்துவிடவில்லை. ஆரம்பகால வேதகலாபனைகள் இதற்கு மற்று மொரு காரணம் எனலாம். கொன்சன்ரைன் மன்னனின் ஆட்சிக்காலத்தில் உரோமைய சாம்ராஜ்சியத்தில் அங்கீகரிக்கப்பட்ட மதமாக கத்தோலிக்க திருச்சபை மாறுகின்றது. அக் காலகட்டத்தில் கலைகள் குறிப்பாக நாடகங் களிற் காணப்பட்ட ஒழுங்கீனங்களுக்காகவும் பிறழ்வுகளுக்காகவும் அவை திருச்சபையில் இருந்து தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

நாடகத்தில் ஈடுபடுவோரிற்கு ஞானஸ்தா னத்திலிருந்து விடுப்பு அளிக்கப்படும் என்ற கட்டளையும் பிறப்பித்து நாடகத்தையே இல்லாமல் செய்கின்றது திருச்சபை. மத்திய காலப் பகுதியில் கத்தோலிக்க மதம் பல தேசங்களிற்கு வேகமாக பரவி இருந்தது. வழிபாடுகள், திருப்பலிகள் அனைத்தும் பிர தேச மொழிகளைத் தவிர்த்து, இலத்தீன் மொழி யிலேயே நிகழ்த்தப்பட்டன. இதனால் நிகழும் வேதாகம வாசிப்பு, விளக்கப் பிரசங்கங்கள் போதிய விளக்கமின்மையைத் தோற்றுவித் தன. இந்த சிக்கலை சமாளிக்கவும் திருப் பலியின் முக்கியத்துவத்தை அதிகரிக்கவும் சிறுசிறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவ்வாறே திருப்பாடுகளின் காட்சியும் தோன்றியது.

## தேர்தல் களம்

செந்தணன்

# உங்கள் வாக்குகளை இந்த தேர்தலில் சரியான முறையில் தவறாது பயன்படுத்துங்கள்

இதுவரைகாலமும் நடைபெற்ற பொதுத் தேர்தல்கள் தமிழ்மக்களைப் பொறுத்தவரை வெறும் சம்பவங்களாகவே நடைபெற்றுவந் தன. ஆனால், இன்று நடைபெறும் தேர்தலா னது தமிழரின் தலைவிதியை நிர்ணயிக்கவுள்ள தாகக் கருதப்படுவதால், அனைத்துத் தமிழர் களும் இந்தத் தேர்தலில் விரும்பியோ விரும் பாமலோ பங்குபற்றவேண்டிய கட்டாயமுள் ளது.

சர்வதேச சமூகம் இந்தத் தேர்தலை - நடைபெற்றுக்கொண்டிருந்த, தற்போது பாதி யில் நிற்கும், சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடர்வதற்கான மக்களின் ஆணையைப் பெறுவதற்கான தேர்தலாகவும், தமிழ் மக்க ளின் உள்ளத்து உணர்வுகள், அபிலாசைக ளின் ஒட்டுமொத்த வெளிப்பாட்டிற்கான தேர் தலாகவுமே பார்க்கிறது.

இந்த நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் தோன்றி, பொருளாதாரமும் மக்களின் மனங் களும் மீண்டும் சிதைவுற்றுப்போக அனுமதிக் காதிருப்பதற்கான தேர்தலாகவே வெளி உல கத்தால் இந்தத் தேர்தல் அவதானிக்கப்பட்டு வருவது யாரும் மறுக்கமுடியாத உண்மை யாகும்.

உள்ளத்து உணர்வுகளைச் சுயமாகக் கொண்டு, தமிழர்கள் வாக்களிப்பதன்மூலம் இந்தத் தேர்தலில் ஒன்றுபட்ட உணர்வலையை அவர்கள் வெளிப்படுத்தமுடியும்.

இலங்கைக்கு 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவே ஆசியாவில் முதல்முதல் சர்வஜனவாக்கு ரிமை அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்வாகவும் குறிப்பிடப்படுகிறது, குறிப்பாகப் பிரித்தானியர்க ளால் ஆசியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட மிகமுக்கிய ஜனநாய ஆயுதமாக மக்கள் மத்தியில் பேதமைகள் நீங்குவதற்காகவும், சமவுரிமை வளர்வதற்காகவும் ஒவ்வொருவ ருக்கும் வழங்கப்பட்டதே இந்த வாக்குரிமை யாகும்.

இந்த சர்ஜனவாக்குரிமை வழங்கப்பட்ட போது, டொனமூரின் பரிந்துரைகளை எதிர்த்த மத்தியதர வர்க்கத்தினர் - கல்விகற்ற, சொத் துடைய ஆண்களுக்கு மட்டுமே இந்த வாக்க ளிக்கும் உரிமையை வழங்குமாறு வலியுறுத் தினர். அத்தோடு, கல்வி அறிவற்றவர்கள், சொத்தற்றவர்கள், பெண்கள் முதலானோ ருக்கு வாக்களிக்க முன்னுரிமை வழங்கப் பட்டால் - வாக்குகளை விற்றல், ஆள்மாறாட் டம் செய்தல் முதலான பல தவறுகள் நடக் கும். இதற்குப் பாமரமக்கள் வாக்குகளின் பெறுமதி உணராததன்மை காரணமாக அமைந்துவிடும் எனக்கூறினார்.

இவற்றை மறுத்த டொனமூர்- ஜனநாயக நீரோட்டத்துள் இறங்கும்போது, அத்தகைய தவறுகள் நடந்தாலும் காலவோட்டத்தில் அது திருத்தப்பட்டு சிறந்த அரசியல் அனுபவமும், அரசியல் ஞானமும் மக்களுக்கு இயல்பாகக் கிடைக்கும் எனக் கூறினார்.

அந்த நம்பிக்கையிலேயே அவர் இந்த சர்வஜன வாக்குரிமையை அறிமுகப்படுத்தி வைத்தார். ஆனால், அவர் எதிர்பார்த்தபடி மக்கள் தமது உரிமைகளைப் பயன்படுத்த வில்லை. இதற்கு ஆதாரமாக இன்றுவரை வாக்குகளை ஒரு போத்தல் சாராயத்திற்கும், சைக்கிளுக்கும், பணத்திற்கும் விற்பவர்கள் எம்மத்தியில் இருப்பதை காணமுடிகிறது.

அத்தகையவர்களுக்கு ஒன்று சொல்ல வேண்டும் - இன்று நடைபெறப்போகும் தேர் தல் தமிழ் மக்களின் ஏகோபித்த தீர்மானத்தை யும், ஒன்றுபட்ட உணர்வையும் வெளிப்படுத்து வதாக அமையவேண்டும்.

அவ்வாறு வாக்குகளை விற்பதால், அவை பயனற்றதாகிப்போய்விடுவதுடன், தமிழ் மக்க ளுக்கு எதிராகவே அவை திரும்பவும் வாய்ப்ப ளிக்கும்.

இதேபோல், ஒரு கட்சியில் அல்லது ஒரு குழுவில் தனது உறவினன் அல்லது அயல வர் போட்டியிடுகிறார் என்பதற்காக, அவருககு வாக்களிக்க எண்ணுவதும் மிகவும் தவறா னது. எமது வாக்கும் இந்த நாட்டில் கிடைக் கக்கூடிய அனைத்து நன்மைகளையும் தமிழ் மக்கள் அடைவதற்குப் பயன்படவேண்டும் என்பதை மனதில் நிறுத்தி வாக்களிக்க வேண்டும்.

கிடைக்கப்போகும் தேர்தல்முடிவு அனைத்து தமிழ் மக்களுக்கும் நன்மையளிப்பதாக அமைய வேண்டும். அதற்கு நாமும் தோள் கொடுக்க வேண்டும் என்ற உணர்வுடன் வாக்களிக்க வேண்டும்.

அதேவேளை, அனைவரும் தமது வாக்கு களைப் பயன்படுத்தவேண்டும். அப்போதுதான் டொனமூர் கண்ட கனவு நிஜமாகி, இந்த நாட் டில் ஜனநாயகம் தழைக்கமுடியும்.

எனவே, சொற்ப சலுகைக்கோ, தெரிந்தவர் என்பதற்காகவோ அன்றி, எனக்குள்ள வாக் குரிமைமூலம் நிரந்தர சமாதானத்தை ஏற் படுத்தப்போகிறேன் என எண்ணிக்கொண்டு அனைவரும் இன்று வாக்களியுங்கள். வாக்க ளிக்கச்செல்லாது வீடுகளில் உள்ளவர்களை வாக்களிப்பு நிலையங்களுக்கு அழைத்துச் சென்று வாக்களிக்கச் செய்யுங்கள்.

அதுவே எமது தலைவிதியை நிர்ண யிக்கும் இந்தத் தேர்தலுக்கு உரமாக அமை யும்.

**மாதிரி வாக்குச் சீட்டு**

| | | |
|---|---|---|
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | | |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | | |
| ஐக்கிய சோசலிசக் கட்சி | | |
| ஜாதிக, ஹெல உறுமய | | |
| புதிய இடதுசாரி முன்னணி | | |
| றுகுணு மக்கள் கட்சி | | |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | | |
| சுவராஜ்ய | | |
| சுயேட்சைக் குழு I | | |
| சுயேட்சைக் குழு II | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

# அமெரிக்க பாதுகாப்பு பணியாளர் நால்வர் ஈராக்கில் படுகொலை

ஈராக்கின் பலூஜா நகரில் நான்கு அமெரிக்க பாதுகாப்பு பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட அமெரிக்க பணி



யாளர்களின் உடல்கள் காருடன் எரிக்கப்பட்டதுடன் உடல்பாகங்கள் பாலம் ஒன்றின் மீது தொங்கவிடப்பட்டன. மக்கள் சந்தோசத்தினால் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்தக் கொடூரமான செயலுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்ததுடன் ஈராக்கில் ஜனநாயகம் ஏற்படும்வரை தொடர்ந்து அங்கு பணியாற்றப்போவதாகவும் தெரிவித்துள்ளது.

நேற்று பலூஜாவில் நடத்தப்பட்ட மற்றுமொரு குண்டுத் தாக்குதலில் 5 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், பிரித்தானியப் படையினர் பிரயாணம் மேற்கொண்ட வண்டி நிலக் கண்ணித் தாக்குதலுக்குட்பட்டபோது 3 பிரித்தானிய படையினர் காயமடைந்துள்ளனர்.

இதனிடையே, கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருந்த அமெரிக்கர்கள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டதாவது,

அமெரிக்காவின் வட கரோலினாவில் அமைந்துள்ள ஸ்தாபனமொன்று ஈராக்கில் பலூஜா நகரில் உணவுப் பொருட்கள் விநியோகம் மேற்கொண்டிருந்த வண்டிகளுக்கு பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டிருந்த வேளையில் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உட்பட்டது.

ஆத்திரமடைந்த மக்கள் வண்டியை எரியூட்டிய பின்னர் உடல்களை வெளியே இழுத்ததாகவும் இருவரது உடல்களை வண்டியுடன் பிணைத்து இழுத்துச்சென்றதாகவும் சிறுவர்களும், இளைஞர்களும் உடலைத் துண்டுகளாக்கி பாலமொன்றில் தொங்கவிட்ட



பின் 'அமெரிக்கர்களின் கல்லறை பலூஜா' என்ற வாசகத்தை இறந்த உடலின் அருகில் வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1993 ஆம் ஆண்டு அமெரிக்கப் படைகள் சோமாலிய நாட்டின்மீது போர் தொடுத்திருந்த வேளையில், இவ்வாறான சம்பவம் ஒன்றின் பின் அமெரிக்க படைகள் அந்த நாட்டிலிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஐரோப்பிய நாடுகளிடம் உதவிபெற ஆபிரிக்கா பேச்சுகளில் ஈடுபடும்!

அயர்லாந்தில் நடத்தப்படவுள்ள உயர் மட்ட கூட்டத்தில் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து அதிகளவில் உதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆபிரிக்கா பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளது.

'நேபாட்' எனப்படும் அமைப்பின் மூலம் ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்பினை ஆபிரிக்கா பெற்றுக்கொள்ளவுள்ளது. குறிப்பாக நிதி, பாதுகாப்பிற்கான உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது.

உள்நாட்டுப் போர் மற்றும் சதிப்புரட்சிகள் மூலம் அரசாங்கத்தை மாற்றியமைத்தல் ஆபிரிக்க நாடுகளில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதனால், ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் இவற்றிற்கு மாற்றம் காண்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

கடந்த மாத ஆரம்பத்தில் ஆபிரிக்க நாடுகளின் ஒன்றியம் சமாதானம் மற்றும் பாதுகாப்பிற்கான சபை ஒன்றினை உருவாக்கியிருந்தது. ஆபிரிக்காவின் இராணுவ தேவைகளைக் கண்காணிப்பதே இந்த ஒன்றியத்தின் நோக்கமாகும்.

ஐந்து ஆபிரிக்க நாடுகள் ஒன்றிணைந்து பலம்மிக்க படையொன்றினையும் உருவாக்கியுள்ளன. இவற்றை முழுமையாக உருவாக்குவதற்கு ஓராண்டுவரை எடுக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நைஜீரியா சமாதானப் படையினரை லைபீரியாவிற்கும் தென்னாபிரிக்கா புறூண்டிக்கும் உடன் செயல்படும் படைத் திட்டத்தின் பிரகாரம் அனுப்பியிருந்தது. ஆபிரிக்காவின் இந்த வகையான திட்டங்கள் அமெரிக்காவினால் உருவாக்கப்பட்டிருந்தன.

மேலும், இராணுவப் பயிற்சிகளை வழங்குவதற்கும் அமெரிக்கா உறுதியளித்துள்ளது. மேலும், ஐரோப்பிய ஒன்றியம் 300 மில்லியன் டொலர்களை நிதியுதவியாக வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கானாவில் அண்மையில் 'கோபி அனான் மையம்' என்ற பெயரில் நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆபி



ரிக்க நாடுகளின் படைகளுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் ஆபிரிக்க நாடுகள் தமது உள்நாட்டுப் பிரச்சினைகளை தாமே சர்வதேச உதவியின்றி தீர்த்துக்கொள்ளமுடியும்.

## உலக நோக்கு

# சீக்கிய மதத் தலைவர் மாரடைப்பால் மரணம்



சீக்கிய மக்களின் மதம், கலாசாரம் ஆகியவற்றை உலக நாடுகளில் பாதுகாப்பதற்கென சீக்கிய குடித்துவாரா பிரபந்தக் குழுவிற்கான தலைவரான குர்சரண் சிங் தோரா மரணமடைந்தார். 80 வயதுடைய இவர் இதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

'தோரா' வின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அவரது பிறப்பிடத்திற்கு மக்கள் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமிர்சர் நகரில் அமைந்துள்ள வைத்தியசாலையில் முதலில் சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் பின்னர் டெல்கியில் உள்ள இதய நோய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் குர்சந்திரசிங்கின் மரணம் நிகழ்ந்துள்ளதால் பஞ்சாப்பின் முக்கிய எதிர்க்கட்சியான சிரோமணி அகாலி தளத்திற்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக அமிர்தசரஸில் அமைந்துள்ள சீக்கியர்களின் பொற்கோவிலும் அதனுடன் அமைந்துள்ள தொடர்கட்டிடங்களும் இன்று மூடப்பட்டிருக்கும். இன்று சீக்கிய மதக் கோட்பாடுகளுக்கிணங்க இவரது கிராமத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்படவுள்ளது.

### இனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும்

# ஐ.நாவின் திட்டத்தை ஏற்றுக்கொள்ள சைப்பிரஸ் தலைவர்கள் மறுப்பு தெரிவிப்பு

கடந்த 30 ஆண்டுகளாக சைபிரஸில் பிரிந்துள்ள இனங்களை ஒன்றிணைப்பதில் சைபிரஸின் பிரிந்துள்ள இனங்களின் தலைவர்களிடையே ஒற்றுமை காண்பதற்கு ஐக்கிய நாடுகளின் திட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கு தலைவர்கள் மறுப்புத் தெரிவித்தனர்.

இதனால், சுவிற்சர்லாந்தில் கிரிக் துருக்கி, சைப்பிரஸ்ட் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளிடையே நடைபெற்ற பேச்சுக்களின் பின் ஐக்கிய நாடுகளின் செயலாளர் கோபி அனான் புதிய திட்டமொன்றை தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி கருத்துக் கணிப்பொன்று சைப்பிரஸில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதேவேளை, சுவிற்சர்லாந்தின் மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள தனது இருப்பிடத்திலிருந்து கோபி அனான் தெரிவிக்கும்போது, சைப்பிரஸ் மக்கள் ஐக்கிய நாடுகளின் தீர்ப்பினை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதனை தீர்மானிக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

சைப்பிரஸ் நாட்டின் மீது துருக்கி 1977 ஆம் ஆண்டு ஆக்கிரமிப்பொன்றை மேற்கொண்டிருந்தது. இதன் பின்னர் தென்பகுதி 'கிரேக்க சைப்பிரஸ்ட்' களின் கட்டுப்பாட்டிலும் வட பகுதி துருக்கியர்களின் கட்டுப்பாட்டிலும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நேட்டோ படையினரின் முற்றுகையிலிருந்து பொஷ்னிய - சேர்பிய தலைவர் தப்பியுள்ளார்

(பெல்கிரேட்)

பொஷ்னிய சேர்பியர்களின் தலைவர் ரடோவன் கராட்சிக் நேட்டோ படையினரின் முற்றுகையிலிருந்து தப்பியுள்ளார்.



ரடோவன் 1992 ஆம் ஆண்டிலிருந்து 1995 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மேற்கொண்ட மனிதப் படுகொலைகள் தொடர்பாக குற்றவாளியாகக் காணப்பட்ட இவர் கடந்த 8 ஆண்டு காலமாக மறைவிடங்களில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

பொஷ்னியாவின் மலைப் பிரதேசமான பாலியில் அமெரிக்க - பிரித்தானிய படையினைக் கொண்ட நேட்டோப் படையினர் தேவாலயம் ஒன்றினையும் அதன் அருகில் அமைந்துள்ள தேவாலய குருவின் வீட்டினையும் முற்றுகையிட்டிருந்தனர்.

இதேவேளை, பி.பி.ஸியின் நிக்கொட்டன் தெரிவித்த கருத்தில்- பொஷ்னியாவின் தலைநகர் பெல்கிரேட்டில் நேட்டோ படைகள் நேற்றுக் காலை கட்டடம் ஒன்றை வெடிபொருட்களைக் கொண்டு தகர்த்து உள்நுழைந்த வேளையில், பாதிரியாருக்கும், அவரது மகனுக்கும் காயம் ஏற்பட்டதாகவும், இருவரும் உடன் ஹெலிகொப்டர் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேட்டோ படையினர் கராட்சிக்கையும் அவரது குழுவினரையும் கைது செய்யும் பணியினை தீவிரப்படுத்தியுள்ளனர். அத்துடன், நேட்டோப் படையினர் விரைவில் தமது பணிகளை ஐரோப்பிய ஆணையகத்தின் படைகளிடம் ஒப்படைக்கவுள்ளனர்.



இதேவேளை, கடந்த மூன்று மாதங்களில் நேட்டோப் படையினர் இரு தடவைகள் பாலி நகரத்தில் கராட்சிக்கு எதிராக முற்றுகையை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத செயல்களில் ஈடுபட்ட பலர் இத்தாலிய பொலிஸாரினால் கைது

பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் எனக் கருதப்பட்ட பலரை இத்தாலிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இத்தாலியின் மத்திய பல்கலைக்கழகம் அமைந்துள்ள பிரதேசமான பெருகியா என்ற பிரதேசத்தில் மூன்று இத்தாலியர்களையும் இரு துருக்கியர்களையும் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பயங்கரவாதம் தொடர்பான விசாரணைகளுக்கென துருக்கியில் 7 பேரும், நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் ஒவ்வொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

துருக்கியில் பயங்கரவாத செயல்களினால் பாதிக்கப்பட்ட சிறைச்சாலை ஒன்றினை பொலிஸார் முற்றாகவே அகற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இஸ்லாமிய தீவிரவாதிகளின் செயல்பாடுகள் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளதாகவும் இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மட்றிட் இல் நடைபெற்ற ரயில் குண்டுத் தாக்குதலின் பின்னர் இத்தாலியின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்களுக்கான பல்கலைக்கழகப் பெருகியாவில் அமைந்துள்ளதால் அந்தப் பிரதேசத்தில் தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளலாமென தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தடைசெய்யப்பட்ட அமைப்பான துருக்கியின் புரட்சிகர மக்கள் விடுதலை முன்னணி செப்ரம்பர் மாதம் ஸ்தான்புலில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பொறுப்பென தெரிவித்திருந்தது. இந்தத் தாக்குதலில் மூன்று பொலிஸாரும் ஒரு அவுஸ்ரேலிய பிரஜையும் கொல்லப்பட்டதுடன் இருபதுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மட்டு அரச அதிபர் மீதான சூடு; அரசியல் காரணம் இல்லை!

## கிழக்கு பொலிஸ் அதிகாரி

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி மீதான துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு எவ வித அரசியல் தலையீடும் இல்லையென கிழக்கு பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் நெவில் விஜய சிங்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக- காயமடைந்த அரசாங்க அதிபருடன் வாகனத்தில் பயணம்செய்த இரண்டு நபர்களிடமும் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும்- கடந்த சில நாட்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள அதிகரிக்கப்பட்டுள்ளன. இவற்றை விட, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தல் வன்முறை சம்பவங்கள் 1341 ஆக அதிகரித்ததாக புகார்!

நேற்றுக்காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலயங்களுக்குள், தேர்தல் வன்முறைகள் 87 ஆல் உயர்ந்துள்ளன.

இந்த வன்முறைச் சம்பவங்களுடன் சேர்த்து வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதினத்திலிருந்து இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை 1341 ஆக அதிகரித்துள்ளன.

இதுவரைகாலமும் இடம்பெற்ற வன்முறைகளில் 495 வன்முறைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செய்திருக்கின்றது.

330 முறைப்பாடுகள் ஐக்கிய தேசியக் கட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை- இருகட்சிகளினாலும் செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 71 சம்பவங்கள் குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவை. அம்பாறை மாவட்டத்திலேயே ஆகக்கூடுதலாக 112 தேர்தல் வன்முறைகள் இதுவரை இடம்பெற்றுள்ளன.

(01)

# தேர்தல் ஆணையாளருக்கு எதிரான மனு உயர் நீதிமன்றத்தால் நிராகரிப்பு!

(கொழும்பு)

அரச இலத்திரனியல் ஊடகங்களை பக்கச்சார்பின்றி நிர்வகிக்கும் பொருட்டு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவினால் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டமையை ரத்துச்செய்யுமாறுகோரி அரச ஊடகப் பிரதிநிதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

இந்த வழக்கை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் தேர்தல் ஆணையாளரின் அரச ஊடகங்களுக்கான தேர்தல் வரையறைகளை ரத்துச்செய்யுமாறும், தேர்தல் ஆணையாளரால் தகுதி வாய்ந்த அதிகாரி நியமிக்கப்பட்டமை- செல்லுபடியற்றதாக்குமாறும் அரச ஊடகப் பிரதிநிதிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளமுடியாது எனத் தீர்ப்பளித்தது.

அத்துடன் அரச, இலத்திரனியல் ஊடகங்களில் தேர்தல் தொடர்பான சர்ச்சைக்குரிய விடயங்கள் நீதிவானின் உத்தரவுடனேயே தகுதிவாய்ந்த அதிகாரியினால் ஒளி, ஒலி பரப்பப்படவேண்டும் எனவும் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வாக்களிப்பில் வன்முறைகள்...

எதுவும் நிறைவேறாது.

ஏனெனில், அவ்வாறு செயற்பட்டால் அந்த வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்குகள் அனைத்தையும் ரத்து செய்து மீண்டும் வாக்கெடுப்பு நடத்துவோம்.

இதில் ஒன்று முக்கியமானது நாளை சனிக்கிழமை என்பதால் மறு வாக்குப்பதிவு நடத்துவதற்கு செல்ல மாட்டோம். சட்டத்திற்கு அமைய தேர்தலை ஞாயிற்றுக் கிழமை நடத்த முடியாது. அதனால், தேர்தலை ஆறாம் திகதி நடத்த நேரிடும்.

இந்த நிலைமையினால் மாவட்டத்தின் ஒட்டுமொத்த தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் நாள் நீடிக்கும்.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வாக்கு மோசடிகள் நடைபெறும் வாக்களிப்பு நிலையங்களில் மறு வாக்களிப்பு நடத்துவது குறித்து விஷேட கவனம் செலுத்தப்படும்.

வாக்களிப்பு நிலையத்திற்கு அதிகாரிகள் செல்வதற்கு தடை ஏற்பட்டாலோ, வாக்களிப்பு நிலையத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை விரட்டியடித்தாலோ, வாக்களிப்பு நிலையத்தின் வாக்குச் சீட்டுக்களை அபகரித்தாலோ, வாக்குப் பெட்டியில் பலவந்தமாக வாக்குச் சீட்டுக்களை நிரப்ப முற்பட்டாலோ. இந்த நிலையத்தின் வாக்களிப்பை ரத்துச்செய்வோம்.

இவற்றை விட வாக்களிப்பு காலை 7 மணிக்கு ஆரம்பிக்க முடியாது போனாலோ, மாலை 4 மணிக்கு வாக்களிப்பு நிறுத்தமுடியாது போனாலோ, வாக்கெண்ணும் நிலையத்துக்கு வாக்குப்பெட்டிகளை ஒப்படைக்க முடியாது போனாலோ வாக்களிப்பை ரத்துச்செய்வோம் எனவும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்ற...

தொடர்புடையதாகக் காணப்படுவதாக சுயாதீன தேர்தல் கண்காணிப்புக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டது.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு எனப்படும் தேர்தல் கண்காணிப்போடு தொடர்புடைய இவ்வமைப்பு ஜனாதிபதி சந்திரிகாவினால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைதியான...

எனவும், இதற்கு விடுதலைப் புலிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவர் என்றும் அதேவேளை, படையினரும், பொலிஸாரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என விடுதலைப் புலிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கருத்தினை ஏற்றுக் கொண்ட யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் -

அமைதியான வாக்களிப்பிற்கு தாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாகவும் முகமாலையில் வன்னி மாவட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாகவும் அங்கு அமைதியான, சுதந்திரமான வாக்கெடுப்பு இடம்பெறும் என்பதை தாம் உறுதி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தர்.

# வடபகுதி மக்களை வெளியேற்றும் கருணா குழுவின் செயற்பாடுகளுக்கு கண்காணிப்பு குழு தலைவர் கண்டனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்டகாலமாக வசித்து வரும் வடபகுதி பொதுமக்களையும் அங்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வடபகுதி வர்த்தகர்களையும் கருணா குழுவினர் அச்சுறுத்தி வெளியேற்றுவதனை ஐரோப்பிய யூனியன் தலைமை தேர்தல் கண்காணிப்பாளர் ஜோன் குஷ்கனன் வண்மையாகக் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது-

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பொதுமக்கள் மற்றும் விஷேட வைத்தியர்கள் என்போர் அச்சுறுத்தல் மூலமாக அங்கிருந்து வெளியேற்றப்படுவதாக அறிகின்றேன். இவ்வாறு இந்தச் சம்பவம் உண்மையானால் இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வைத்தியர்கள் வெளியேற்றப்படுவதானது அங்குவாழும் மக்களுக்கான சுகாதார தேவைகளை ஈடுசெய்யமுடியாத நிலையிலுள்ளது. இதனால் அங்குவாழும் மக்கள் மிகுந்த நெருக்கடியில் உள்ளனர்.

இன்று பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மட்டக்களப்பில் இவ்வாறான பதற்றமான நிலை உருவாகியுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதது.

எனவே மக்களை அச்சுறுத்தி இப்பகுதியிலிருந்து வெளியேற்றும் இந்த நடவடிக்கைகளை உடன் நிறுத்த சம்மந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமெனவும் கேட்டுள்ளார். (01)

# மட்டக்களப்பு தேர்தல் ஏற்பாடுகள் தடையேதுமின்றி நடைபெறுகின்றன

## தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் பணிகள் யாவும் தங்கு தடையின்றி நடைபெற்று வருவதாக அந்த மாவட்டத்தின் பதில் மாவட்ட அரசாங்க அதிபரும், தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான செ.புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் வாக்குச் சாவடிகளுக்கு- வாக்குப் பெட்டிகளும், தேர்தல் காலத்தில் கடமையாற்றும் ஊழியர்களும், மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருக்கும் மத்திய நிலையத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்ட எல்லைக் கிராமமான, மகா ஓயாவில் இருக்கும் இரு வாக்குச் சாவடிகளுக்கான வாக்குப் பெட்டிகளும், தேர்தல்கால அலுவலர்களும் உலங்குவானூர்தி மூலம் அனுப்பப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பதற்ற நிலை காணப்பட்டபோதிலும் தேர்தல் கடமைக்கு ஊழியர்கள் அனைவரும் சமூகமளித்துள்ளனர். மாவட்ட தேர்தல் மத்திய நிலையமாக இயங்கும் இந்துக் கல்லூரிப் பகுதியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் கூட்டாக பாதுகாப்புப் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

அத்துடன்- படையினரின் கட்டுப்பாடற்ற பகுதிகளிலுள்ள 80 ஆயிரம் வாக்காளர்களுக்காக 13 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் 90 கொத்தணி வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப் பெட்டிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

அங்குள்ள வாக்காளர்களுக்கான போக்குவரத்து வசதிக்கென வாகனங்களும் அந்தப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்படடுள்ளன.

இந்தப் பகுதி மக்களின் போக்குவரத்து தொடர்பாக அந்தந்த பிரதேச செயலாளர்கள் அதற்கான இணைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவத்தாட்சி அலுவலா மேலும் தெரிவித்தார். (01)

## துணைப்படை வீரர் சாவு.

சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் தமிழீழ தேசியத் துணைப் படை வீரர் ஒருவர் சாவடைந்தார்.

2 ஆம் லெப்டினன்ட் வீரசிங்கம் என்று அழைக்கப்படும் திருநகர் கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் அரை ஏக்கர் கனகாம்பிகை கோவிலடியைக் தற்கால முகவரியாகவும் கொண்ட சின்னையா வீரசிங்கம் என்ற தேசிய துணைப்படை வீரரே சாவடைந்தவராவர்.

## கருணா குழுவின் முடிவை...

நிலமையின்படி - வைத்திய சாலையில் இருக்கும் வைத்தியர்களைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கே சேவையை வழங்கமுடியும். இந்த நாட்களுக்குள் நிலமை வழமைக்குத் திரும்பாவிட்டால் நோயாளர்களுக்கு பாரிய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு.

அத்துடன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வெளிமாவட்ட வைத்தியர்களின் உதவியுடன் தங்கி நிற்பது. எனவே, இந்த வைத்தியர்களின் வெளியேற்றத்தினால் பாதிக்கப்படப்போவது நோயாளர்களேயாவர்.

ஆகவே, இந்தப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட்டு வைத்தியசாலையின் பணிகள் யாவும் பழைய நிலைக்குத் திரும்புமெனத் தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (01,07)

## நேரகாலத்துடனேயே...

உங்களுக்குரிய வாக்குச்சீட்டு கிடைக்கும்.

உங்களுக்கு விருப்பமான அரசியல் கட்சிக்கோ, சுயேட்சைக் குழுவுக்கோ உங்கள் வாக்குகளை அளிக்கமுடியும்.

அதன்பின் மூன்றுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்கு உங்கள் விருப்பு வாக்கை அளிக்கமுடியும்.

உங்களது அடையாளம் சம்பந்தமான ஏதேனும் பிணக்குவரும்போது- அத்தாட்சிப்படுத்த உங்கள் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது வாகன ஓட்டுனருக்குரிய அனுமதிப்பத்திரம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை என்பவற்றைக் கொண்டு செல்வது பயனுடையது.

வாக்குச்சீட்டின் மேற்பகுதியில் போட்டியிடும் கட்சியினதும்- அவற்றுக்கெதிரே சின்னங்களும் காணப்படும். நீங்கள் விரும்பினால் கட்சிக்கோ அல்லது குழுவுக்கோ வாக்களித்து விட்டு விருப்பு வாக்கை அளிக்காமல் விடவும் முடியும்.

மக்கள் வாக்களிப்பின் இரகசியத்தைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, நீங்கள் எவருக்கு வாக்களித்தீர்கள் என்ற விபரத்தையாரும் அறியமுடியாது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசேட உளவுப் பயிற்சியை...

தலைமையகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, பயிற்சியை முடித்த சிப்பாய்களுக்கான சின்னங்களைச் சூட்டினார்.

இந்தப்பயிற்சியில் சிறப்பாக சகல துறைகளிலும் சித்திபெற்ற ரணசிங்க என்ற முதலாவது விஷேட படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய்க்கு மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால கேடயம் வழங்கினார்.

சிலந்து என்று குறியீட்டுப் பெயரில் நடத்தப்படும், விஷேட யுத்த புலனாய்வுப் பாதுகாப்பு என்ற பயிற்சியானது -

இராணுவ சிப்பாய்களுக்கு- எதிரி சம்பந்தமான புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக்கொண்டு, புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் சிறு குழுக்களாகச் சென்று, எதிரியைத் தாக்கி அழிப்பற்குத் தேவையான அறிவையும் பயிற்சியையும் பெற்று நல்லதொரு புத்திக் கூர்மையுள்ள சிப்பாயை உருவாக்குவதற்கே நடத்தப்படுகிறது.

50 நாட்கள் இரவு, பகலாக- குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் புலனாய்வு படைப்பிரிவு, கொமாண்டோப் படைப்பிரிவுகளில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நிகழ்வு வைபவத்தில் யாழ்.குடாநாட்டுக்கான உதவிக் கட்டளைத்தளபதி, படைத் தளபதிகள் உட்பட படையினரும், அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## கருணா குழுவின்....

இலங்கையின் அனைத்து மக்களும் வாழ்வியற் சுதந்திரத்தைக் கொண்டுள்ளனர். இதனை மீறிச் செயற்படுவது முழுமையான மனித உரிமை மீறலாகும்.

இப்பிரச்சினைக்கு உடனடியா[illegible] தர்வு காணப்படாதுவிட்டால் இலங்[illegible]யில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும். எனவே, குறிப்பிட்ட தரப்புக்கள் இப்பிரச்சினையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் எனத் தெரிவித்துள்ளன.

(01)

## புதிய அரசினை...

வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வாக்காளர்களுக்கு 41 கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் ஓமந்தை இராணுவ சோதனை

சாவடி அமைந்துள்ள பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு ஓமந்தை மகா வித்தியாலயத்தில் 12 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்களிப்பு நிலையங்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக்குழுப் பிரநிதிகள் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர்.

இன்று மாலை 4 மணியளவில் வாக்களிப்பு முடிவடைந்ததும் மாவடடங்கள் தோறும் உள்ள வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் உடனடியாக எடுத்துச் செல்லப்படும்.

சகல வாக்குப் பெட்டிகளும் வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கு வந்து சேர்ந்ததும் வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பமாகும் எனத் தெரியவருகிறது.

இரவு 8 மணிக்கு முன்னர் வாக்குகளை எண்ணும் பணி ஆரம்பமாகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை - தபால் வாக்குளை எண்ணும் பணி பி.ப. 5 மணிக்கு ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதலாவது தேர்தல்முடிவு நாளை அதிகாலை 2 மணிக்கு முன்னர் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தமுறை தேர்தல் முடிவுகள் ஊடகங்களுக்கு உடனுக்குடன் வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதுடன், இணையத்தளம் மூலமும் வெளியிடப்படும்.

ராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்திலிருந்து வெளியிடப்படும் உத்தியோகபூர்வ முடிவுகளையே வெளியிடுமாறு தேர்தல் ஆணையாளர் கண்டிப்பாக உத்தரவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய தேர்தலில் மக்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையிலேயே அடுத்த அரசாங்கத்தை யார் அமைக்கப் போகிறார்கள் என்று தெரிவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.